வாசவி நியூஸ்

ஜனவரி 2025 ரூ.15/-

அலுவல் மாத இதழ்

சர்வதேச வாசவி சங்கங்கள் ©

ISO 9001-2015 பதிவு பெற்ற சமூக சேவை அமைப்பு

பதிவு எண் 800/2008

வருடத்திற்கான கரு
மனிதநேயம்

வருடத்திற்கான திட்டம்
சமூகம்

சர்வதேசத் தலைவர்-2025
Vn.இருகுல்ல ராமகிருஷ்ணா

மதுரை ICON இனிமை நினைவுகள்

VCI தலைமை குழுவில் உயர் தலைவர்கள்

காலங்களாக
தொடரும் நம்பிக்கை
மானேபள்ளி ஜுவல்லர்ஸ்

நுகுல
முரளி கிருஷ்ணா
NRI மாவட்டத்
தலைவர்

2025ல்
அடைய விரும்பும்
அனைத்தையும்
பெறுவது
எப்படி?

சர்வதேச வாசவி சங்கங்கள்

Live to Serve

VASAVI CLUBS INTERNATIONAL
HUMANITY COMMUNITY 2025

2025ற்கான கரு
மனிதநேயம்

2025ற்கான திட்டம்
சமூகம்

C **COMMUNITY:** ஆரிய வைஸ்ய சமூக நலப் பணிகள்.

O **OWNING SOCIETY:** 2025ம் ஆண்டின் முதன்மைத் திட்டத்தை உள்ளடக்கிய மிகவுயர்ந்த 9 சேவைப் பணிகள். வாசவி மனோ நேஸ்தம்.

M **MOTHER VASAVI MATHA:** ஆண்டு முழுதும் ஆன்மிக திட்டங்கள்.

M **MOTHER NATION:** தேச பக்தி செயல்கள்.

U **UNITY:** கூட்டுறவை மேம்படுத்தும் திட்டங்கள்: நம் நாட்டிலும்-அயல் நாடுகளிலும்.

N **NEW THOUGHTS:** சக வாசவியன்களுக்கு துணை நிற்கும் வகையில் புதிய சிந்தனைகள்.

I **INSTITUTIONAL PROGRESS:** எல்லா வகைகளிலும் VCI மேலும் உயர்த்திச் செல்ல பல முயற்சிகள்.

T **TIME FOR SMART SERVICES:** சமுதாயத்தின் அடித்தட்டு மக்களுக்கான குறுகிய கால சேவைகள்.

Y **YOUTH CONNECT:** இளைஞர்களை ஊக்கப் படுத்த ஐந்து வகையான செயல் திட்டங்கள்.

2025
50 சேவை திட்டங்கள்

மாவட்டங்கள், சங்கங்களுக்கு செயல் திட்டங்கள் பிப்ரவரி இதழில்

சேவைகளுக்கு முதலிடம்

RNI No.TELTAM/2015/66267

வாசவி நியூஸ்

ஜனவரி 2025 ரூ.15/=

சர்வதேச வாசவி சங்கங்களின் அலுவல் மாத இதழ்

Regd. No. 800/2008

உள்ளடக்கம்

- சர்வதேசத் தலைவரின் தகவல்கள் 04
- வாசவி மனோநேஸ்தம் துவங்கியது 05
- 2025ல் விரும்பிய அனைத்தையும் அடைவது எப்படி? 08
- புதிய தலைவர்களை சந்தியுங்கள் 10
- முரளி கிருஷ்ணா: NRI சங்கங்கள் விரிவாக்கம் 14
- GATE & RCTS 15
- புதிய ஆளுநர்களை நாம் சந்திப்போம் 17
- தி லெஜெண்ட்: ICON-2024 22
- V601A: புதிய மாவட்டம் துவங்கியது 28
- வாழ்நாள் சாதனை விருதுகள் 30
- ஐந்து மொழிகளில் VIPPRO வெளியானது 31
- புஷ்பா கருத்தாக்கத்தில் வலம் வந்த பதாகை காட்சியளிப்புகளுக்கு விருதுகள் 33

அதிகாலையில் விசாகா இரயில் நிலைய வாயிலில்...

ICON மேடையில் சேவைகளுக்கு முதலிடம் என்று அறிவித்த INP இருகுல்ல ராமகிருஷ்ணா ன. 1 அன்று விசாகப்பட்டனம் வந்தார். மாவ. V201A ஆளுநர் தம்மன்னா அமர்நாத் மாவட்டத் தலைவர்களுடன் இரயில் நிலையத்திற்குச் சென்று அவருக்கு சிறப்பான வரவேற்பு நல்கினார்கள். அங்கு பாதை ஓரத்தில் உறங்கிக் கொண்டிருந்த வறியவர்களுக்கு ராமகிருஷ்ணா போர்வை போர்த்தினார். இதை சற்றும் எதிர்பாராத அந்த வறியவர்வகள் வியப்பால் மலைத்தனர். அவர் கண்களில் நன்றி கலந்த ஆனந்த கண்ணீர். ICON-2024ல் 'வாசவி மனோ நேஸ்தம்' என்கிற தலைப்பை சேவைப் பணிகளுக்கு அவர் சூட்டினார். இவ்வகையில் ராமகிருஷ்ணா சிறப்பு குழந்தைகளை பயிற்றுவிப்பதற்கான கல்வி உபகரண தொகுப்பை ஆசிரியர்களுக்கு வழங்கினார். ஜன.1 அன்று சப்தவர்ணாலு எனும் நல்லெண்ண விஜயம் நிறைவு பெற்றது.

IEC அதிகாரிகளுக்கு அதிரடி சலுகைகள்

ஜன. 3 அன்று பதவியேற்பு நிகழ்வுடன் VINTEC நிறைவு பெற்றது. 2025ல் IEC அதிகாரிகள் எவ்வாறு செயல்பட வேண்டுமென்பதை இந்நிகழ்வில் விளக்கப்பட்டது. அதிகாரி ஸ்ரீபுரம் ராஜேஷ் இதற்கு தலைமை வகித்தார். புகழ் பெற்ற உரையாளர் கெம்பா நாகேஷ்வர் ராவ் முதன்மை பயிற்சியாளர்.

- பலவிதமான நிகழ்ச்சிகளுக்கு IEC அதிகாரிகள் தலைமை வகிக்க இருப்பதை இந்நிகழ்வில் INP இருகுல்ல ராமகிருஷ்ணா விளக்கினார்.
- முன்னாள் INPகளின் நல்லாசிகளோடு 2025ல் நடத்தப்படவுள்ள 50 திட்டங்களுக்கு IEC அதிகாரிகள் தலைவர்களாக பொறுப்பு வகிப்பார்கள்.
- உதாரணமாக, 'மாஸ் ஷஷ்டியப்த பூர்த்தி', 'கார்திகா சமாராதனா' போன்ற நிகழ்ச்சிகளுக்கு மானேபள்ளி ராமாராவ் தலைவராக இருப்பார் என்று INP இருகுல்ல ராமகிருஷ்ணா நிகழ்வில் விளக்கினார்.

இத்தீர்மானத்தை IEC அதிகாரிகள் பலத்த கரவொலி எழுப்பி வரவேற்றார்கள்.

ஜனவரி மாதத்திய நிகழ்ச்சிகள்

- ஜன. 15: ரங்கோலி போட்டிகள்– குழந்தைகளுக்கு
- ஜன. 26: குடியரசு தின கொண்டாட்டங்கள்
- ஜன. 30: மகாத்மா காந்தி நினைவு நாள்
- ஜன. 31: வாசவி மாதாவின் ஆத்மார்ப்பண தினம்

தங்க நகைகள் ஜொலிப்பதற்கு...

தங்க அணிகலன்களை விரும்பி அணியும் பெரும்பாலோர் அவைகளை தூய்மையாக பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்துவது இல்லை. உங்கள் தங்க நகைகளை ஜொலிப்புடன் பாதுகாக்க சில குறிப்புகள்

தங்க நகைகளை நமது இல்லத்திலேயே தூய்மைப் படுத்திக் கொள்வது நல்லதாகும். இதனால் பிறர் நமக்கிழைக்கும் களவை தடுக்க முடியும். பிளாட்டினம், தங்கம், முத்துக்கள் மற்றும் கல் நகைகளை தனித்தனியாக வைக்க வேண்டும். நகைகளை சோப்பு கலந்த (கடைகளில் கிடைக்கும்) நீரினால் நனைத்து மெல்லிய துணியால் மென்மையாக துடைக்க வேண்டும். அப்படியும் அழுக்கு தங்கியிருந்தால் க்ளப் சோடா கொண்டு துடைக்கலாம். எண்ணெய் பிசுக்குகளை நீக்க சோப்பு கரைசலில் 15 நிமிடங்கள் ஊறவைத்து துடைக்கவும்.

சாப்ட் டூத் பிரஷ்

தங்க நகைகளை துடைக்க சாப்ட் டூத் பிரஷ்ஷை பயன்படுத்தலாம். டூத் பிரஷ் சாப்ட் தன்மை கொண்டதாக இருப்பது அவசியம். தூய்மை செய்வதற்கு முன்பு பிரஷ்ஷை 15 நிமிடங்கள் சுடு நீரில் ஊற வைத்தால் உராய்வு மென்மையாகவும் இருக்கும் அழுக்குகளும் நீங்கும். ஐப்ரோ பிரஷ், ஹேர் டிரை பிரஷ் போன்றவைகளை தவிர்க்கவும்

மதுரை ICON வெற்றியுடன் நிறைவு பெற்றது

ICON மாநாட்டில் பங்கேற்க மதுரைக்கு வருகை தந்த வாசவியன்களை அதிகாலை குளிர்காற்று வரவேற்றது. மதுரை மீனாட்சி அம்மன் தரிசனம், பல ஆயிர வாசவியன்களின் கூட்டம், LED விளக்குகள் ஒளிர VCI தலைவர்களின் உரைகள், நான்கு மாநில சுவையான உணவு வகைகள், வருடம் முழுக்க சேவை செய்ததற்கான நினைவுப் பரிசுகள்... என்ற வகையில் பற்பல இனிமையான நினைவுகளை இதயங்களில் சுமந்து கொண்டு வாசவியன்கள் ஊர் திரும்பினார்கள். மதுரை ICONஐ மிக அற்புதமாக காட்சிப்படுத்தியிருந்தார் INP-2024 ரவிச்சந்திரன். இவ்வளவு பெரிய மாநாட்டை மிகப் பெரிய அடைய வைத்திருந்தார்.

RNI No. : TELTAM/ 2015/66267
டிசம்பர் 2024 ரூ.15/-
தொகுதி : 09
வெளியீடு : 1
பக்கங்கள் : 32

வாசவி நியூஸ்

Live to Serve

சர்வதேச வாசவி சங்கங்களின்® அலுவல் மாத இதழ்

சர்வதேச வாசவி சங்கங்கள்® பதிவு எண்: 800/2008
ISO 9001-2015 பெற்ற சமூக சேவை அமைப்பு
ப்ளாட் எண் 21, குழந்தைகள் பூங்கா அருகில், ஸ்ரீபுரி காலனி, காகுடா, கர்கானா, செகந்திராபாத்-500 015 செல்: 098850 22121
Website : www.vasaviclubs.org E-mail: vasaviclubs.org@gmail.com
www.facebook.com/vcivasavi

ஆசிரியர் குழு

சர்வதேசத் தலைவர்
Vn. இருகுல்ல ராமகிருஷ்ணா
செல்: 95537 77888

சர்வதேச நிர்வாக துணைத் தலைவர்
Vn.சித்த சூர்யபிரகாச ராவ்
செல்: 99516 39599

சர்வதேச செயலாளர் (நிர்வாகம்)
Vn.கர்லபடி ஸ்ரீனிவாசுலு
செல்: 98494 22380

சர்வதேச செயலாளர் (சேவைப் பணிகள்)
Vn.போத சாய் சூரிய பிரகாஷ்
செல்: 98494 99385

சர்வதேச பொருளாளர்
Vn.சுஜாதா ரமேஷ் பாபு
செல்: 98843 38220

இதழ் கருத்து & வடிவாக்கம்
ஸ்ரீ S.V. சுரேஷ்
செல்: 86394 28450

VCIன் விருந்தினர் இல்லங்கள்

ஹைதராபாத், விஜயவாடா மற்றும் திருப்பதியில் VCIக்கு விருந்தினர் இல்லங்கள் உள்ளன. இந்நகரங்களுக்கு வாசவியன்கள் வருகை தரும்போது இந்த கெஸ்ட் ஹவுஸ்களை பயன்படுத்த வேண்டும். இவ்விடுதிகளில் அனைத்து வசதிகளும் உள்ளன. கட்டணமும் குறைவாகவே உள்ளது. எனவே வாசவியன்களும் ஆரிய வைஸ்யர்களும் இந்த விடுதிகளில் முன் பதிவு செய்து தங்க வேண்டும்.

- **Hyderabad:** A.C. Rooms, T.V. Hot water facility, 24 hours checkout facilities. Double bed rooms from Rs.999 to Rs.1199.
  Consult for rooms: G. Shivani, cell: 6300622492, plot no: 21, New Children's park. Sirpuri colony, Kakaguda, Karkhana, Secunderabad-500015.
- **Vijayawada:** A.C. rooms and 150, 100 and 50 members' capacity function halls. tariff: Rs.999. Marriages, birthday, baby shower functions & meetings, trainings.
  For consultations: Smt. Soujanya, 7995144472, Rajivnagar Road, Payakapuram, Vijayawada-15.
- **Tirupathi:** A.C and non A.C. rooms. From Rs.1200. 24 hours checkout facility.
  Contact: Putta Lokanath, Manager, 9666740740, 8333932390, 877299911. No: 21-2-234/2, Satyanarayanapuram, near Alipiri, Tirupathi.

பதவி வகிப்பது அனுபவிப்பதற்கல்ல... மக்களுக்கு சேவை செய்வதற்கு

வாசவியன் டயமண்ட் ஸ்டார் KCGF
இருகுல்ல ராமகிருஷ்ணா
சர்வதேசத் தலைவர் 2025

அன்பு வாசவியன் சகோதரர்களுக்கு,
ஜெய் வாசவி

என்னை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள், இருப்பினும் இந்தப் புதிய பதவியில் நான் உங்களைச் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி கொள்கின்றேன். நான் பதவி சுகத்தை அனுபவிப்பவன் இல்லை, இது சேவைகள் செய்வதற்கே என்று கருதுபவன். இந்தப் பதவி முற்று முழுதாக பொது மக்கள் சேவைக்கானது என்று எண்ணுகின்றேன்.

"நிகழ்ச்சி ஒன்றாகத்தான் இருக்கின்றது, நீந்துபவர்களில் எவருக்கு முத்து கிடைக்குமென்று? வலையை விரிக்கத் தெரிந்தவர்களுக்கே மீன்கள் கிடைக்கின்றன. ஏனையவர்கள் கடல் நீரில் நனையும் சுகத்தை மட்டுமே அடைகிறார்கள்.

வாழ்க்கையும் அவ்வாறே... அனைவருக்கு வாழ்க்கை உண்டு, ஆனால் விளைவுகள் முயற்சிகளைக் கொண்டே அமைகின்றன".

ஒரு நாள் அதிகாலையில் ஒரு மீனவன் மீன் பிடிக்க கடலுக்குச் சென்று ஆழ் கடலில் தன் வலையை விரித்தான். சற்று நேரத்தில் தனது வலை கனப்பதை உணர்ந்தான். மீன் சிக்கி விட்டது என்று கஷ்டப்பட்டு வலையை படகிற்கு இழுத்தான். அதிகாலை என்பதால் இன்னமும் இருள் விலகவில்லை. அவன் வலையைத் தொட்டுப் பார்த்தபொழுது கடினமான கற்கள் இருப்தாக உணர்ந்து கவலை கொண்டான். தனது விதியை நொந்து கொண்டு பல கற்களை கடலுக்குள் வீசியெறிந்துவிட்டு மீண்டும் வலையை வீசினான். அப்போது மெதுவாக வெளிச்சம் பரவத் தொடங்கியது. காலை ஒளியில் மீதமிருந்தவைகள் வைரக்கற்கள் என்பதை தெரிந்து வியப்பில் உறைந்து போனான். தான் கடலில் வீசியெறிந்தவைகள் வைரக் கற்கள் என்றறிந்து பெருந்துயரம் கொண்டான். கதறி அழுதான், ஆனால் ஆகப்போவது என்ன? ஒன்றுமில்லை.

இந்த மீனவனைப் பாருங்கள்! தனக்குக் கிடைத்த மிகப் பெரிய அதிர்ஷ்டத்தை இழந்தவனாக நிற்கின்றான்?!

இவ்வகையில்தான் வாய்ப்புக்கள் நம்மை வந்தடைகின்றன. நாம்தான் மிக கவனமாக அவைகளை பயன்படுத்தி முயற்சி செய்து முன்னேற வேண்டும். அப்போதுதான் வெற்றியை அடைய முடியும்.

2025ம் ஆண்டு வாசவி மாதா எனக்களித்த நல் வாய்ப்பாக கருதுகின்றேன். இவ்வாய்ப்பை மக்கள் சேவைகளுக்காக பயன்படுத்துவேன். இதே போல ஆளுநர்கள், செயலாளர்கள், பிராந்தியத் தலைவர்கள், மண்டலத் தலைவர்கள், IEC அதிகாரிகள், IPC அதிகாரிகள் அனைவரும் தங்கள் பதவிகளை ஒரு வாய்ப்பாக கருதி அவர்கள் அளவில் அடித்தட்டு மக்களின் நலனுக்கு உதவ வேண்டும். இந்த ஆண்டில் சேவைப் பணிகளில் முழுதாக ஈடுபடுவோம்.

உங்கள் சகோதரன்
வாசவி மாதா மற்றும்
வாசவியன்கள் சேவைப் பணிகளில்
வாசவியன் டயமண்ட் ஸ்டார் KCGF
E. Ramakrishna
இருகுல்ல ராமகிருஷ்ணா
சர்வதேசத் தலைவர் 2025

"என்னால் மாற்ற இயலாத எதையும் ஏற்றுக்கொள்ள நான் தயார் ."

–அப்துல் கலாம்

உண்மையில் சேவைகளுக்கே முதலிடம்

வாசவி மனோ நேஸ்தும் திட்டத்தின் கீழ் NIEPIDக்கு ரூ.12 லட்சம் மதிப்பில் ஒரு வாகனம்

INP இருகுல்ல ராமகிருஷ்ணா பதவியேற்ற தினத்தில் தன்னை ஒரு யதார்த்த தலைவராக நிரூபித்தார். தான் சொல்வதை செய்பவர் என்பதை வெளிப்படுத்தினார்.

தனக்கு சேவைகளே முதலிடம் என்பதை அவர் தெளிவு படுத்தியிருந்தார். அவ்வகையில் தான் பதவியேற்ற முதல் தினத்திலேயே தனது பணிகளை துவங்கிவிட்டார்.

மனநலம் குன்றிய குழந்தைகளுக்கு சேவையாற்றும் 'NIEPID' அமைப்பிற்கு ஜுன் 3 அன்று INP இருகுல்ல ராமகிருஷ்ணா கார் ஒன்றை கொடை கொடுத்தார். தெலுங்கானா சட்டப் பேரவைத் தலைவர் குட்டா சுகேந்தர் ரெட்டி நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பங்கேற்று கார் சாவியை 'NIEPID' அதிகாரிகளிடம் ஒப்படைத்தார்.

2024, நவம்பரில் இருகுல்ல ராமகிருஷ்ணா செகந்திராபாத்தில் உள்ள நேஷனல் இன்ஸ்டியூட் பார் தி எம்பவர்மெண்ட் ஆப் இன்டெலக்ட்சுவல் டிஸ்ஸெபிலிடீஸ்– NIEPID அமைப்பிற்கு வருகை தந்திருந்தார். இந்த அமைப்பு ஒன்றிய அரசின் சோஷியல் ஜஸ்டிஸ் அண்ட் எம்பவர்மெண்ட் அமைச்சகத்தின் கீழ் சிறப்புக் குழந்தைகளுக்கு சேவை செய்து வருகின்றது. அக்குழந்தைகளை பரிசோதித்து மருத்துவ உதவிகள் வழங்கி அவர்கள் திறமைகளை வளர்த்து எதிர்காலத்தில் தனித்து நிற்பதற்கான வலிமையை கற்பித்து வருகின்றது. அனைத்து உதவிகளையும் இவ்வமைப்பு இலவசமாக வழங்குகின்றது.

இவ்வமைப்பிற்க சென்று வந்ததும் இருகுல்ல ராமகிருஷ்ணா இயக்குநர் மேஜர் ராம்குமார் மற்றும் இதர அதிகாரிகளுடன் நீண்ட ஆலோசனை நடத்தினார். இறுதியில், அவர்கள் கேட்டுக் கொண்ட வகையில் அவர்கள் விரைவாக, சிறப்பாக சேவைகள் செய்வதற்கு உரிய உதவிகளைச் செய்வதாக உறுதி கூறினார்.

நன்கொடையாளர்கள் முன்வந்தனர்

இருகுல்ல ராமகிருஷ்ணா 50 வகையான சேவைத் திட்டங்களை நடத்த உத்தேசித்துள்ளார். NIEPID அமைப்பிற்கு கொடை வழங்குவதை முதல் சேவையாக எடுத்துக் கொண்டார். இதை 2025ன் முதல் ஆளுநர் கூட்டத்தில் தெரிவித்தார். ஆளுநர்கள் இதற்காக ரூ.6 லட்சம் நிதி கொடுப்பதாக கூறினார்கள். V104A மாவட்ட துணை ஆளுநர்கள் வீரெல்லி சதீஷ் குமார், தல்லாபள்ளி ராமு ஆகியோர் ரூ.6 லட்சம் கொடை வழங்கினார்கள். இதனைச் சேர்த்து ரூ.12 லட்சம் மதிப்பில் மாருதி எர்டிகா கார் ஒன்றை வாங்கி NIEPID அதிகாரிகளிடம் வழங்கினார்.

ஊரகப் பகுதிகளில் சேவைப் பணிகள்

நன்கொடையாகப் பெற்ற வாகனத்தின் மூலம் NIEPID அதிகாரிகள் 100 கி.மீ சுற்றளவில் உள்ள பல கிராமப்புறங்களுக்குச் சென்று மனநலம் குன்றிய சிறப்புக் குழந்தைகளுக்கு தேவையான உதவிகளை எளிமையாக வழங்க முடியும்.

இருகுல்ல ராமகிருஷ்ணா பதவியேற்ற முதல் நாளிலேயே பயனுள்ள அற்புதமான சேவையை வழங்கியிருப்பதை VCI உயர் தலைவர்கள் நிகழ்வில் பாராட்டி வாழ்த்தினார்கள்.

ஸ்ரீ குட்டா சுகேந்தர் ரெட்டி வாயிலாக இருகுல்ல ராமகிருஷ்ணா NIEPID அதிகாரியிடம் வாகனத்தின் சாவியை வழங்கினார்

சட்டப் பேரவைத் தலைவருக்கு NIEPID அமைப்பின் சேவைகளை இருகுல்ல ராமகிருஷ்ணா விளக்கினார்

NIEPID அமைப்பிற்கு VCI கொடை கொடுத்த மாருதி எர்டிகா கார்

இருகுல்லாவின் விமர்சையான

ஜுன்–3 அன்று சர்வதேசத் தலைவர்–2025 மற்றும் தலைமை குழுவும் பதவியேற்ற வைபவம் சிறப்பாக நடந்தது. அப்போது, பெரிய அளவிலான கட்–அவுட்கள் மற்றும் பெரிய பதாகைகள் முக்கிய இடங்களில் காட்சியளித்தன. பளபளக்கும் ப்ளக்ஸ் பதாகைகள் நடுவில் மலர் கொத்துக்கள், சால்வைகளுடன் ஜெய் வாசவி என்கிற கோஷங்கள் மத்திய அலுவலகத்தில் எதிரொலித்தன.

- சர்வதேசத் தலைவர்–2024 R.ரவிச்சந்திரன் பதவிப் பொறுப்பை சர்வதேசத்த தலைவர்–2025 இருகுல்ல ராமகிருஷ்ணா வசம் ஒப்படைத்தார். தனது மனைவி இருகுல்ல மமதா அருகிருக்க நீல வண்ண போஜ்பூரி சூட் அணிந்த இருகுல்ல ராமகிருஷ்ணா பதவிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.
- முந்தைய சர்வதேச நிர்வாக துணைத் தலைவர் இருகுல்ல ராமகிருஷ்ணா சேவா சௌபாக்யா, சேவா சங்கல்ப KCGF சித்த சூரிய பிரகாச ராவிடம் சர்வதேச நிர்வாக துணைத் தலைவர் பதவியை ஒப்படைத்தார்.
- முந்தைய சர்வதேச செயலாளர் Dr.H.S.நாகபூஷணா தனது பொறுப்பை வித்யாசங்கல்ப, KCGF கர்லபடி ஸ்ரீனிவாச ராவிடம் நிர்வாகத்திற்காகவும், சேவைகளுக்காக வித்யாசங்கல்ப KCGF போத சூரிய பிரகாசிடமும் ஒப்படைத்தார்.
- முந்தைய சர்வதேச பொருளாளர் சித்த சூரிய பிரகாச ராவ் தனது பொறுப்பை புதிய சர்வதேச பொருளாளர் சுஜாதா ரமேஷ் பாபுவிடம் ஒப்படைத்தார்.

8000 KCGF நன்கொடைகள் – சாதனை

இருகுல்ல ராமகிருஷ்ணா பதவியேற்ற நாளில் முந்தைய சாதனையை திருத்தி எழுதினார். VCIன் முதுகெலும்பாகத் திகழும் KCGF திட்டத்திற்கு 8000 கொடைகள் கொடுத்து சாதனை படைத்தார். முந்தைய ஆண்டில் 5555 KCGF கொடைகள் பெற்றது சாதனையாக இருந்தது. இவர் 8000 KCGF கொடைகளை வழங்கி முந்தைய சாதனையை முறியடித்தார். இவர் பதவி ஏற்ற தினத்திலேயே 8000 KCGF கொடைகளை வழங்கினார். நிகழ்வில் பங்கேற்ற VCI உயர் தலைவர்கள் அனைவரும் இருகுல்லாவின் சாதனையைப் பாராட்டி வாழ்த்தினார்கள். ஜனவரி மாத இறுதிக்குள் 10000 KCGF கொடைகளைத் திரட்டிக் கொடுப்பது தனது இலக்கு என்று நிகழ்வில் உரையாற்றிய INP இருகுல்லா ராமகிருஷ்ணா தெரிவித்தார். அதே சமயத்தில் 800 சங்கங்களிடமிருந்து புதுப்பித்தலுக்கு உரிய படிவம் 1010 VCI மத்திய அலுவலகத்திற்கு வந்து சேர்ந்ததும் குறிப்பிடத்தக்கது.

பதவியேற்பு வைபவம்

உயர் தலைவர்களின் நல்வாழ்த்துக்கள்

INP-2025ஆக இருகுல்ல ராமகிருஷ்ணா பதவியேற்ற விழாவில் பல முக்கிய ஆளுமைகள் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.

தெலுங்கானா சட்டப் பேரவைத் தலைவர் குட்டா சுகேந்தர் ரெட்டி, தெலுங்கானா ஆரிய வைஸ்ய மகாசபை தலைவர் அமராவதி லக்ஷ்மி நாராயணா, நிஜாமாபாத் Ex. MLA பிக்கல கணேஷ் குப்தா, செகந்திராபாத் கன்டோண்மெண்ட் MLA ஸ்ரீ கணேஷ், DCP ஸ்ரீனிவாச குப்தா, தெலுங்கானா போலீஸ் ஹவுசிங் கார்ப்பொரேஷன் முன்னாள் தலைவர் உப்பால ஸ்ரீனிவாச குப்தா மற்றும் பலர் இருகுல்ல ராமகிருஷ்ணாவிற்கு சால்வையணிவித்து வாழ்த்தினார்கள்.

VCI உயர் தலைவர்களின் ஆசிகள்

நிகழ்வில் புதிய செயற்குழு உறுப்பினர்களுக்கு VCI உயர் தலைவர்கள் நல்வாழ்த்துக்களுடன் ஆசி வழங்கினார்கள். வீசம்செட்டி அயோத்யராமுலு, மூஸ்தியால சங்கர், யதா நாகேஷ்வர் ராவ், நூலி வெங்கடரமண மூர்த்தி, அகிர் வெங்கடேஷ், அய்த ராமுலு, கெம்பா நாகேஷ்வர் ராவ், வங்கதர வாசுதேவராவ் மற்றும் பாத சுதர்ஸன் ஆகியோர் புதிய INP இருகுல்ல ராமகிருஷ்ணாவையும் அவரது குழுவையும் வாழ்த்தினார்கள்.

IEC அதிகாரிகள், மாவட்ட ஆளுநர்கள், மாவட்ட அதிகாரிகள் மற்றும் பல நிலைகளிலுள்ள அதிகாரிகள் விழாவில் பங்கேற்றார்கள். ஒரு சமயத்தில் VCI மத்திய அலுவலகத்திற்கு வரும் சாலையில் போக்கு வரத்து நெரிசல் மிகுந்து வாகனங்கள் பயணிக்க நீண்ட நேரமானது. ஆனால் காவலர்கள் விரைந்து வந்து நெரிசலை சீர்படுத்தினார்கள்.

கொடிகள் ஏற்றப்பட்டன – வேத பண்டிதர்கள் ஆசி கூறினார்கள்

- இருகுல்ல ராமகிருஷ்ணா பதவியேற்கு முன்பாக VCI கொடி, வாசவி மாதா கொடி மற்றும் தேசியக் கொடியையும் VCI வளாகத்தில் ஏற்றி வணங்கினார். இதே வளாகத்தில் அமைந்துள்ள VCI நிறுவனர் KC குப்தா, மகாத்மா காந்தி மற்றும் பொட்டி ஸ்ரீராமுலு சிலைகளுக்கு மாலைகள் அணிவித்து வணங்கினார்.
- பிறகு வாசவி மாதாவிற்கு சிறப்பு பூஜைகள் செய்தார். சித்த சூரிய பிரகாச ராவ், கர்லபடி ஸ்ரீனிவாசுலு, போத சாய் சூரியபிரகாச ராவ் மற்றும் சுஜாதா ரமேஷ் பாபு ஆகியோரும் இதில் பங்கேற்றனர்.
- இருகுல்ல ராமகிருஷ்ணாவிற்கும் அவரது குழுவினருக்கும் ஸ்ரீ பச்சம்பள்ளி சந்தோஷ் குமார் சாஸ்திரி வேத மந்திரங்கள் ஓதி ஆசிகளை வழங்கினார்.



அடைவது எப்படி?

2025ம் ஆண்டில் எப்படி வெற்றி காண்பது?

எவ்வாறு சாத்தியம்?

ஒவ்வொரு நாட்காட்டியிலும் இம்மாற்றம் நிகழ்கின்றதா?

எனில்

நாம்தான் ஒவ்வொரு வாய்ப்பையும் வெற்றியாக மாற்றியமைத்து பயன் பெற வேண்டும்.

இதை சாதிக்க உங்களிடம் உறுதியான விருப்பமும், ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு சவாலையும் ஒரு வாய்ப்பாகக் கொண்டு உங்கள் வெற்றியாக மாற்ற வேண்டும்.

பில் கேட்ஸ், சத்ய நாதெள்ளா, சுந்தர் பிச்சை, ஜெப் பெஜோன், முகேஷ் அம்பானி, நரேந்திர மோடி, ராஜமௌலி மற்றும் குகேஷ்...

இவர்களில் ஒருவரை உங்களுக்கு முன்மாதிரியா ஏற்றுக் கொண்டு அவரைப் போலவே வெற்றி காண முயலுங்கள்.

“இவ்வுலகில் பிறரால் வெற்றி காண முடிந்தால் உங்களாலும் வெற்றி காண முடியும். ஆனால் அதற்கு உறுதியான விருப்பமும் அசாத்திய பொறுமையும் தேவை, வெற்றியடையும் இவற்றை வரை காக்க வேண்டும்.” இலக்கை வெற்றிக்கான இப்பண்புகள் மிக அவசியம்.

ஒரேயொருவர் மட்டும் நம்பினார்

முன்பொரு காலத்தில் ஒரு கிராமத்தினர் தண்ணீர் இன்றி தவித்து வந்தார்கள். பயிர்களுக்கும் குடிக்கவும் தண்ணீர் இல்லை. ஒரு சுவாமிஜி அக்கிராமத்திற்கு வந்தார். கிராமத்தினர் அவரைச் சூழ்ந்து கொண்டு தண்ணீர் பிரச்சனையைத் தீர்த்து வைக்க கோரினார்கள். அவரும் தீர்வு தருவதற்கு கிராமத்திற்கு வெளியில் ஒரு ஹோமம் நடத்த ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு ஒரு நிபந்தனையும் விதித்தார். அது என்னவென்றால், கிராமத்தில் உள்ள அனைவரும் ஹோமத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்பதுதான். சுவாமிஜி கூறியபடியே கிராமத்தினர் அனைவரும் ஹோமத்திற்கு வந்தார்கள். அனைவரும் வந்து விட்டார்களா? என்று சுவாமிஜி கேட்டதும் ஒருவர் எண்ணிப் பார்த்தார். ஒரு சிறுவன் மட்டும் வரவில்லை எனத் தெரிந்தது. அனைவரும் அந்த சிறுவனின் வருகைக்காக ஆவலுடன் வழியைப் பார்த்திருந்தனர். சற்று நேரத்திற்குப் பிறகு அந்த சிறுவன் வருவது தெரிந்தது. அனைவரும் வியந்தார்கள். ஏனென்றால் அவன் மழை வரும் என்று நம்பி ஒரு குடையைக் கொண்டு வந்திருந்தான். அவனது வருகையைக் கண்டதும் சுவாமிஜி புன்னகை தவழ நம்பிக்கையின் உண்மையான வடிவம் இச்சிறுவன் என்றார்.

****

வெற்றியை பெற்றே தீருவது என்று தீர்மானித்தால் முதலில் உங்கள் இலக்கின் மீது சரியான தெளிவு வேண்டும்.

உங்களுக்கு ஒரு கனவு இருக்க வேண்டும்

ஒரு மகத்தான தலைவராக உயர்வதற்கோ அல்லது சமுதாய சேவையாளராகவோ அல்லது அற்புதமான ஆளுமையாகவோ மாறுவதற்கு அது குறித்து உங்களிடம் ஒரு கனவு இருந்தே ஆக வேண்டும்.

பொதுவாக நல்ல வெற்றிகள் இரண்டு அனுபவங்களில் நிகழும். ஒன்று உங்கள் கனவில் மற்றொன்று நிஜ வாழ்க்கையில்–கடின உழைப்பிற்குப் பிறகு.

தங்கள் வாழ்க்கையில் மகத்தான வெற்றி கண்டவர்கள் கூறும் பொதுவான இரகசியம் இது.

உங்கள் செயல்களால் முன்னோக்கி செல்ல வேண்டும்

உங்கள் கனவை நனவாக்க கடினமாக உழைக்க வேண்டும். இல்லை எனில் அது கனவாகவே முடிந்துவிடும். உங்கள் அறிவுத் திறனை கூர் படுத்திக் கொள்ள வேண்டும். உங்களிடம் அற்புதமான செயல் திட்டம் வேண்டும். நள்ளிரவில் உலகமே உறங்கும்போது உங்கள் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருக்க வேண்டும். விழிப்புணர்வுடன் நீங்கள் இருக்க வேண்டும்.

ஒரு செல்வந்தர் தன் கிராமத்தில் ஒரு அழகிய வீட்டை கட்ட விரும்பினார். இதற்காக கட்டுமான பொருட்கள் அனைத்தையும் நிரப்பி வைத்து பல மேஸ்திரிகளையும் நியமித்தார். கட்டுமானத்தைத் துவக்க பண்டிதரிடம் முகூர்த்த நேரத்தையும் குறித்தார். பின்னர் வேலையைத் துவங்குமாறு கூறினார். ஆனால் எவரும் முன் வரவில்லை. ஏன் நீங்கள் துவங்காமல் இருக்கிறீர்கள் என்று கூவினார். மேஸ்திரிகள் மெதுவாக கூறினார்கள், ஐயா அதற்கு வீட்டிற்கான வரைபடம் தேவை என்றார்கள். பிறகுதான் எதற்கும் செயல் திட்டம் தேவை என்பதை செல்வந்தர் உணர்ந்தார்.

எனவே, நீங்கள் வெற்றியடைய விரும்பினால்... உங்களிடம் ஒரு நல்ல செயல் திட்டம் இருக்க வேண்டும்.

புதிய பாதையில் நகருங்கள்

உங்கள் சராசரி பணி சுழற்சியிலிருந்து நல்ல பயன்களை காண முடியாது. தொழில் நுட்பத்தின் உதவியைப் பெற வேண்டும். எதிர் காலம் பற்றிய பார்வை இருக்க வேண்டும். சமுதாயத்தின் தேவையை தெரிந்து கொண்டு தற்போதைய நிலைமைகளை உணர வேண்டும்.

- இதை நன்குணர்ந்ததினால் கிரந்தி மல்லிகார்ஜுனா பிறருக்கு உதாரணத் தலைவராகத் திகழ்கிறார். ஹைதராபாத்தில் பெருகி வரும் பயணிகளின் தேவைகளை அவர் பார்த்ததினால் அங்கு ஒரு விமான நிலையம் வேண்டும் என்கிற புரிதல் அவரிடம் உருவானது.
- பரபரப்பாக இயங்கும் உலகத்தில் மக்களின் அவசர கதியை ஸ்ரீ மாஜெட்டி ஜகதீஷ் சரியாக கணித்தார். இந்த சூழலில் உணவு விடுதிக்குச் சென்று மக்கள் உணவருந்த கழிக்கும் நேரத்தை கணக்கிட்டு அவர்களின் தேவைக்காக ஸ்விக்கி எனும் செயலியை வடிவமைத்து வெற்றியும் கண்டுள்ளார். தற்போதைய இளைய தலைமுறையினரின் ரோல் மாடலாகத் திகழ்கின்றார்.

சூழலுக்கு தக்கவாறு நீங்கள் மாறுபட்டு சிந்தித்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம். உங்களது வெற்றி உங்களை மகிழ்விக்கும்.

தடைகளைத் தாண்டி வாருங்கள்

நீங்கள் ஒரு காரியத்தை செயல்படுத்தும்போது... தடைகள் வரும். இது ஒரு பொது விதி. தடைகள் ஏதுமில்லாமலிருந்தால் ஒவ்வொரு குழந்தையும் கூட வெற்றியை ருசித்திருக்கும். மிகக் கடுமையான உழைப்பிற்கு பிறகே உங்களால் வெற்றிக் கனியை பறிக்க முடியும்.

தடைகளை நினைத்து பலர் தயங்கி நிற்பார்கள். சிலர் பணியை துவங்கியதும் தடை ஏற்பட்டால் நிறுத்திவிடுவார்கள். சிலர் மட்டுமே வழியில் ஏற்படும் தடைகளைத் தாண்டிச் செல்கிறார்கள். அவர்கள் வெற்றியுடன் பெயரும் புகழும் பெறுகிறார்கள்.

- ஒரு சமயம் இரண்டு நண்பர்கள் தண்ணீர் வேண்டுமென்பதற்காக கிணறு தோண்டினார்கள். தோண்டுவதில் இருவரும் கடுமை காட்டினார்கள். நூறு அடி தோண்டியும் நீர் கிடைக்காததினால் துவண்டனர். அதில் ஒருவன் 'இவ்வளவு தோண்டியும் தண்ணீர் கிடைக்கவில்லை, எனக்கு நம்பிக்கையில்லை, நான் திரும்பிச் செல்கிறேன்' என்றான். மீண்டும் உழைப்போம் தண்ணீர் கிடைக்கும் என்று இரண்டாம் நபர் அவனைத் தேற்றினான். முதல் நபர் அதனை ஏற்காமல் திரும்பிச் சென்றான். இரண்டாம் நபர் துவளாமல் தோண்டுவதைத் தொடர்ந்தான். மேலும் பத்து அடிகள் தோண்டியதும் நீருற்று பொங்கிப் பெருகியது. நம்பிக்கையை கை விடாமல் உழைத்தவனுக்கு நற்பயன் கிட்டியது.

நீங்கள் நெம்பர் 1ஆகத் திகழ முடியும்!

உங்கள் வாழ்க்கையை பின்னோக்கிப் பாருங்கள். உங்கள் கதவுகளை எத்தனை தடைகள் தட்டித் திறந்தன, அவைகளை நீங்கள் பொருட்படுத்தாமல் உற்சாகத்துடன் முன் நோக்கி சென்றதால் கிடைத்த வெற்றியை நினைத்துப் பாருங்கள். அது உங்களுக்கு புதிய உறுதியான நம்பிக்கையைக் கொடுக்கும், தடைகளைக் கடக்கச் செய்யும். ஆனால் இதற்கு உங்களிடம் உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும்.

நெரிசல் மிகுந்த பகுதியல் 70 வயது மூதாட்டி தனது மகன், மருமகள், 10 வயது பேத்தியுடன் வசித்து வந்தார். மகனும் மருமகளும் அலுவலகத்திற்கு சென்றதும், பேத்தி சாலையைக் கடந்து செல்லும் வரை மூதாட்டி அவளை கவனிப்பது வழக்கம். ஒரு சமயம் பேத்தி சாலையின் நடுவில் கடக்கும்போது ஒரு கார் வேகமாக பாய்ந்து வருவதை அவர் கவனித்துவிட்டார். உடனடியாக அவர் சாலையில் பாய்ந்து பேத்திக்கும் காருக்கும் இடையில் கைகளைப் நீட்டிப் பரப்பி காரை தடுத்தி நிறுத்த முற்பட்டார். இதை கவனித்த பாதசாரிகள் அனைவரும் வியப்பில் உறைந்து போனார்கள். அவரது உடனடியான செயலால் சீறி வந்த காரும் நின்று விட்டது.

இருந்தும் மூதாட்டி தனது முகத்தை கரங்களால் மூடிக் கொண்டு கதறி அழுகத் துவங்கினார். சுற்றியிருந்த பொது மக்கள் அவரைத் தேற்றி ஆறுதல் கூறினார்கள். உங்களது பேத்திக்கு அசம்பாவிதம் ஏதும் நிகழவில்லை, நலமாக இருக்கிறாள் கவலை வேண்டாம் என்றார்கள். அப்போது, 'எனது கரங்களுக்கு 70 வயதிலும் இத்தனை வலு உள்ளது என்பதை இப்போது புரிந்து கொண்டேன். ஒருவேளை இந்த வலிமையை நான் இளமை காலத்தில் உணர்ந்திருந்தால் நான் பல வெற்றிகளைக் கண்டிருப்பேனே' இதுவே எனது அழுகைக்குக் காரணம் என்று விம்மிக் கொண்டே கூறினார்.

இது உண்மையில் நடந்தது. நீங்கள் உங்களுக்குள் உள்ள வலிமையை நன்குணர்ந்து கொண்டால் பல அற்புதங்களைப் படைக்க முடியும். 2025ம் ஆண்டை ஒரு வெற்றியாண்டாக மலர வைக்க முடியும். உங்களது ஒவ்வொரு முயற்சியிலும் வெற்றியை மட்டும் காண முடியும்.

50 சேவைத் திட்டங்களுடன் சர்வதேசத் தலைவரின் மகத்தான வருகை



வாசவியன் டயமண்ட் *KCGF
இருகுல்ல ராமகிருஷ்ணா
சர்வதேசத் தலைவர்-2025

சிலர் பதவிக்கு வந்த பிறகே தங்களை தயார் செய்து கொள்வார்கள் வெகு சிலரே பதவிக்கு வருமுன்பே தங்களை தயார் படுத்திக் கொள்வார்கள். அது போன்ற தலைவர்களில் ஒருவர் இருகுல்ல ராமகிருஷ்ணா. இப்பதவிக்கு வருவதற்கு ஆறு மாதங்கள் முன்பே 50 விதமான சேவைகளை 2025ற்கு திட்டமிட்டவர். சேவைகளுக்கே முதலிடம் என்று கூறும் இவர் பதவியேற்ற நாளில் சிறப்பு குழந்தைகளுக்கு உதவும் அமைப்பிற்கு கார் ஒன்றை கொடை கொடுத்து தன்னை நிரூபித்தவர்.

வாசவியன் டயமண்ட் ஸ்டார் KCGF இருகுல்ல ராமகிருஷ்ணாவை அறிந்து கொள்ள விரும்பினால் முதலில் அவரது ஆன்மீகம், ஆரிய வைஸ்ய சமூகப் பணிகள் மற்றும் சமுதாயப் பணிகளை தெரிந்து கொள்வது அவசியம். ERK மேற்குறிப்பிட்ட துறைகளில் தன்னை பிணைத்துக் கொண்டு பெற்ற வெற்றிகளை தெரிந்து கொள்ள வேண்டும். ஆரிய வைஸ்ய வெல்பேர் அசோசியேஷன்கள், புனிதத் தலங்கள், அன்னதான மையங்கள், வாசவி சேவை இயக்கம் என பற்பல அமைப்புகள் ERKயின் பரோபகார பயணத்தில் அங்கம் வகிக்கின்றன. உண்மையைக் கூற வேண்டுமென்றால் ராமகிருஷ்ணாவின் பங்களிப்பால் இத்துறைகள் யாவும் புத்தொளி பெற்றன என்பது மிகையாகாது.

தனது 20வது வயதில் ஷிர்டியின் நித்ய அன்னதான சத்திரத்தின் பொருளாளர் பொறுப்பை ஏற்றவர். பின்னர் நல்கொண்டா மாவட்டத்தின் ஆரிய வைஸ்ய சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆனார். அங்கிருந்து அவரது சேவை பயணம் உயர்ந்து கொண்டே வந்தது. ஒருங்கிணைந்த ஆந்திர பிரதேச ஆரிய வைஸ்ய மகாசபை மற்றும் ஆந்திர பிரதேஷ் ஆரிய வைஸ்ய யுவஜன சங்கத்தின் உப தலைவர் பொறுப்பை வகித்தார். தற்போது தெலுங்கானா ஆரிய வைஸ்ய யுவஜன சங்கத்தின் தலைவராக தொடர்ந்து வருகின்றார். இதனால் மாநிலம் முழுதும் பயணித்தார். பல்துறை ஆரிய வைஸ்ய பிரபலங்கள், வணிகர்கள், துறை வல்லுநர்கள், அரசியல் பிரமுகர்கள் போன்றோருடன் நெருக்கமானார். முன்னறிவிப்பு ஏதும் இல்லாமல் எந்த பிரபலத்தையும் அணுகும் ஒரே ஆரிய வைஸ்ய ஆளுமை இவர். அனைவரையும் இவர் பாசத்துடன் 'அண்ணா' என்றே அழைக்கிறார். அவர்களும் இவருடன் பாசம் குறையாமல் பழகி வருகின்றார்கள்.

பல புண்ணியத் தலங்களில் உள்ள ஆரிய வைஸ்ய சத்திரங்களுடன் ERK நெருக்கமான தொடர்புடையவர். யாதகிரிகுட்டா, கிசரகுட்டா, கொண்டகட்டு, கனிப்பாக்கம் போன்ற தலங்களில் நமது ஆரிய வைஸ்யர்கள் நித்ய அன்னதானம் செய்து வருகிறார்கள். இவையனைத்தின் பின்புலத்தில் ERKன் துணை தொடர்கிறது. தெலுங்கானா, யதாத்ரி ஆலயத்திற்கு ரூ.5 கோடியில் நிலம், வாசவி நித்ய அன்னதான சத்திரம் நிறுவ ரூ.2 கோடி நிதி திரட்டிய ட்ரஸ்டின் செயலாளராக இவர் பொறுப்பு வகித்து காரியங்களை தடையின்றி நடத்தி வருகின்றார்.

வாசவி சேவை இயக்கத்தில் 25 வருடங்களாக பயணிப்பவர்

24 வருடங்களுக்கு முன்பு, ஆரிய வைஸ்யர்களின் நலனுக்கு பாடுபடும் VCIன் பக்கம் ERKன் பார்வை திரும்பியது. மிகுந்த உற்சாகத்துடன் அமைப்பில் சேர்ந்தார்.

வருடம் & VCIல் பங்களிப்பு

2000:	வாசவி சங்கம் புவனகிரியில் உறுப்பினர்
2007:	சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்
2009:	சங்கத் தலைவராக பொறுப்பேற்றார்
2010:	மாவட்ட துணை ஆளுநர் (நிர்வாகம்)
2011:	சர்வதேச திட்ட ஒருங்கிணைப்பாளர்
2012-2013:	துணை ஆளுநர் (நிர்வாகம்)-2 ஆண்டுகள்
2014:	V104A மாவட்ட ஆளுநர்
2015:	IECயில் சர்வதேச இயக்குநர் பிறகு சர்வதேச கூடுதல் பொருளாளர்
2019:	சர்வதேச துணைத் தலைவர் (பல்துறை) : 2020-2021 பதவிக்கு உயர்வு பெற்றார்: சர்வதேச துணைத்தத் தலைவர்
2022:	சர்வதேச மூத்த துணைத் தலைவராக சேவை செய்தார். பிறகு அடுத்த வருடத்தில் சர்வதேச தலைமைக் குழுவில் நுழைந்தார்.
2023:	சர்வதேச செயலாளர்

உபசரிப்பதில் உயர்ந்தவர்

இருகுல்ல ராமகிருஷ்ணாவிற்கு பதவி மோகம் என்றும் இருந்தது இல்லை. ஒவ்வொரு வருடத்திலும் ஒரு புதிய சர்வதேசத் தலைவர்: இருப்பினும் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குபவர். VCI ஏற்பாடு செய்யும் முக்கிய நிகழ்வுகளை தவறாமல் ஹோஸ்ட் செய்பவர். எந்த உயர் பதவியை வகித்தாலும் அர்ப்பணிப்பு குறையாமல் கடமையாற்றும் இயல்பு கொண்டவர் ERK.

- 2013: ICON மாநாட்டுத் தலைவர்
- 2019: MIDCON மாநாட்டின் ஹோஸ்ட்
- 2022: IGB ஹோஸ்ட்
- 2022: ICON துணைத் தலைவர்

- 2024: சர்வதேச நிர்வாக துணைத் தலைவர்
- 2025: 24 வருட உழைப்பிற்கு பிறகு சர்வதேசத் தலைவர்

இவைகளுக்கு முன்பாக: 2009 திருப்பதியில் நடந்த IECக்கும் கேபினெட் கூட்டங்களுக்கும் OBTS பயிலரங்குகளுக்கும் இவரே ஹோஸ்ட்.

- 2015ல் வாசவி மாத இதழை தெலுங்கிலும் தமிழிலும் வெளியிட தீர்மானமாகியது. இதற்குண்டான அலுவல் பணிகளை சிறப்பாக நிறைவேற்றி வெளியிட்டார், VCI உயர் தலைவர்களின் பாராட்டுக்களை பெற்றுக் கொண்டார்.
- கோவிட் பெருந்தொற்று பரவிய சமயத்தில் இருகுல்ல ஆபத்துகளை பொருட்படுத்தாமல் புவனகிரி நகரில் வீடு வீடாக மளிகை பொருட்களை விநியோகித்தவர். பல நோயாளிகளுக்கு தேவையான ஆக்சிஜன் சிலிண்டர்கள், பிளாஸ்மா மற்றும் மருத்துவ மனைகளுக்கு படுக்கைகளையும் வழங்கியவர்.
- சமூக விஞ்ஞானி எனும் போர்வையில் கஞ்ச இலய்யா வைஸ்ய சமூகத்தை சாடியபோது புது தில்லியில் நூற்றுக் கணக்கான வைஸ்யர்களுடன் பெரிய அளவில் தர்ணா போராட்டம் நடத்தி தேசிய ஊடகங்களில் இடம் பெறும் வரையில் பெயர் பெற்றவர் ERK.

லேட் இருகுல்ல சாம்பய்யா, ஸ்ரீமதி ஆண்டாளு தம்பதயரின் மகன் ERK. இவரது மனைவி ஸ்ரீமதி இருகுல்ல மமதா. ERK ரியல் எஸ்டேட் வணிகம் செய்து வருகின்றார்.

ERK தம்பதியருக்கு மூன்று மகன்கள்: சாய் கணேஷ், ஸ்ரீ மணிகந்தா, ஷண்முகா. இவருக்கு பெண் குழந்தை இல்லாததினால் 2025ல் ஊரக பெண் பிள்ளைகளுக்கு சேவைகள் வழங்கவுள்ளார்.

உறுதியான எழில் கொண்ட , எந்த சேவைத் திட்டத்தை கையாளும் தருணத்தில் பொருட் செலவை பொருட்படுத்தாதவர். ஒவ்வொரு திட்டத்தையும் வெற்றி பெற வைக்க தனது முழு செல்வாக்கையும் பயன் படுத்துபவர். வரும் வருடத்தில் கோடிகள் மதிப்பில் பல சேவைத் திட்டங்களையும் நிர்வாகப் பணிகளையும் நிறைவேற்ற திட்டமிட்டுள்ளார் தன்னம்பிக்கை மிகுந்த ERK.

உங்களது ஒத்துழைப்புடனும் VCI உயர் தலைவர்களின் நல் ஆசிகளுடனும் VCIக்கு வரும் ஆண்டில் புத்தொளியை கொண்டு வரவிருக்கின்றார் ERK.

முக்கிய பதவிகள் பல வகித்து 15 வருட சேவைகள்

MIDCON, KCGFநைட் நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்தி வெற்றி பெறச் செய்த வாசவியன் வித்யாசங்கல்ப, கர்லபடி ஸ்ரீனிவாசுலு சர்வதேச செயலாளர் (நிர்வாகம்)-2025 ஆக பதவி வகிக்கின்றார். இவர் VCIல் இரண்டு தசாப்தங்களாக தொடர்ந்து வந்தாலும் கடந்த 15 ஆண்டுகளில் மிக ஆழமாக அமைப்பின் சேவைப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

- 2003ல் வாசவி சங்கம் ஹன்டர் ரோடு, வாரங்கல் சங்கத்தின் உறுப்பினர்
- 2010ல் வாசவி சங்கம் KCGF வாரங்கல் சங்கத்தின் சார்ட்டர் பிரசிடெண்ட்
- 2015ல் V101A மாவட்ட ஆளுநர்
- 2016ல் சர்வதேச இயக்குநர்
- 2017ல் சர்வதேச பொருளாளர்
- 2018ல் சர்வதேச துணைச் செயலாளர்
- 2019ல் மீண்டும் சர்வதேச துணைச் செயலாளர் (இரண்டாம் முறை)
- 2021ல் சர்வதேச துணைத் தலைவர் (பல்துறை)
- 2022ல் சர்வதேச துணைத் தலைவர்
- 2023ல் மீண்டும் சர்வதேச துணைத் தலைவர் (இரண்டாம் முறை)
- 2024ல் சர்வதேச நிர்வாக துணைத் தலைவர்

Vn. வித்யா சங்கல்ப KCGF
கர்லபடி ஸ்ரீனிவாசுலு
சர்வதேச செயலாளர்-2025
(நிர்வாகம்)

இதர அமைப்புகளில் இவரது சேவைப் பணிகள்

இவர் தற்போது தங்கம், வெள்ளி வியாபாரம் செய்து வருகின்றார். கர்லபடி ஸ்ரீனிவாசுலு இதர பல தன்னார்வ சேவை அமைப்புகளிலும் பங்கேற்று வருபவர். ரோட்டரி சங்கத்தில் துணை ஆளுநர் பதவியை வகித்த இவர் புல்லியன் வணிக வட்டங்களிலும் பங்காற்றுகிறார்.

- தெலுங்கானா சில்வர்-கோல்டு டிரேட் யூனியனில் வாரங்கல் பிராந்திய செயலாளராக பதவி வகித்து சேவையாற்றியவர்.
- வாரங்கல் புல்லியன், ஜுவல்லரி, டயமண்ட் மெர்சன்ட்ஸ் அசோசியஷனின் பொது செயலாளராக தற்போது பதவி வகிக்கிறார்.
- இச்சங்கத்தின் செயலாளராக இருந்து இந்த அமைப்பின் கன்வென்ஷன் ஹால் - கோல்டன் கார்டன் கட்டுமானப் பணிகளை மேற்பார்வையிட்டு வருகிறார். இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.15 கோடி.

VCI திட்டங்களுக்கு ஹோஸ்ட்

2016ல் - MIDCON ஹோஸ்ட்
2022ல் - MIDCON ஹோஸ்ட்
2024ல் - KCGF நைட் ஹோஸ்ட்

ஸ்ரீமதி ஸ்ரீலதா இவரது மனைவி. இந்த தம்பதியர்க்கு ஒரு மகனும் மகளும் உண்டு. இவரது மகன் தற்போது இவரது வணிகத்தில் இவருடன் உதவி செய்து வருகின்றார்.

25 வருட உழைப்பிற்கு பிறகு இரண்டாம் உயர் பதவி

"சமுதாயத்திற்கு திருப்பி செலுத்துவோம்"

அதாவது சமுதாயத்திலிருந்து நாம் பெற்றுக் கொண்டதற்கு பிரதியாக நாம் திருப்பிச் செலுத்துவோம்–இதுவே முக்கிய கடமை: அது உங்கள் அறிவு, ஞானம், பொருள் அல்லது நேரம் என எதுவாக வேண்டுமானலும் இருக்கலாம்.

இத்தகைய உயர் சிந்தனையும், நோக்கமும் கொண்டு இயங்கும் இவர் பலருக்கு முன்னுதாரணமாக திகழ்கின்றார்.

இந்தப் பண்புகளைக் கொண்ட வாசவியன் சித்த சூரிய பிரகாச ராவ் தடையின்றி ஒவ்வொரு நாளும் அமைப்பில் முன்னேறி வருகின்றார். இவரது வணிகத்தில் சற்றும் ஓய்வின்றி உழைத்து வந்தாலும் சேவைப் பணிகளுக்கு நேரம் ஒதுக்குவதில் சற்றும் தயக்கம் காட்டாதவர்.

சித்த சூரிய பிரகாச ராவின் குடும்பம் கிரைனைட் வணிகம் செய்கின்றது. ஆந்திராவின் புகழ் நகரமான ஓங்கோலில் இவரது 'ஆப்பிள் கிரைனைட்' பிராண்ட் மிகப் பிரபலமானது.

வாசவி சங்கங்களுக்கு இவரது வருகை

சமுதாய சேவைப் பணிகளில் ஈடுபட இவர் 25 ஆண்டுகளுக்கு முன் வாசவி சங்கத்தில் இணைந்தார். இவரது தாய் சங்கம்–வாசவி சங்கம் ஓங்கோல்.

- 2002–02,03: தலைவர்: வாசவி சங்கம் ஓங்கோல்
- 2005–06: V205A மாவட்ட ஆளுநர்
- 2006–07: தேசிய திட்ட ஒருங்கிணைப்பாளர்
- 2009: சர்வதேச திட்ட ஒருங்கிணைப்பாளர்
- 2010: மாவட்ட ஆளுநர்

பிறகு VCI எக்ஸிக்யூட்டிவ் கவுன்சிலில் உறுப்பினர்

- சர்வதேச துணைச் செயலாளர்
- சர்வதேச துணைத் தலைவர் (பல்துறை)
- சர்வதேச துணைத் தலைவர்
- சர்வதேச மூத்த துணைத் தலைவர்

இவ்வகையில் ல் தனது சேவைகளைத் தொடர்ந்த இவர் 2024ல் இறுதியாக தலைமை குழுவில் சர்வதேச பொருளாளராக பதவி பெற்றார்.

கடந்த இருபத்தைந்து வருடங்களாக பணியாற்றி வரும் இவர் VCI உயர் தலைவர்களிடம் நற்பெயரை பெற்றவர்.

- 2025ம் வருடத்தில் சர்வதேச நிர்வாக துணைத் தலைவர் பதவிக்கு அனைவராலும் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட புகழ் கொண்டவர்.

இதுவரையில் நமது அமைப்பின் சமுதாய சேவைப் பணிகளுக்கு கொடை கொடுத்து வருவதை இவர் நிறுத்தியதே இல்லை. தனது வணிகப் பொறுப்புகளையும் கடமைகளையும் தனது சகோதரர்களிடம் ஒப்படைத்துள்ளார். ஏனென்றால் வணிக கடமைகளினால் தனது வாசவி இயக்கத்தில் தனது சமுதாய சேவைப் பணிகளுக்கு தடை ஏற்பட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தினால் இம்முடிவை இவர் எடுத்துள்ளார்.

நமது இந்திய தேசத்தில் எண்ணற்ற தன்னார்வ அமைப்புகள் ஆர்வத்துடன் இயங்கி வருகின்றன. இருப்பினும், அனைத்து உறுப்பினர்களும் ஒழுக்கம், அர்ப்பணிப்பு, கடமை உணர்வு குறையாமல் சேவைப் பணிகளை தொய்வின்றி செய்து வரும் ஒரேயொரு அமைப்பு உண்டென்றால் அது சர்வதேச வாசவி சங்கங்கள் என தயக்கமின்றி கூறலாம் என்று சித்த சூரிய பிரகாச ராவ் ஒரு நிகழ்வில் உரையாற்றிய போது நம் அமைப்பின் மீதான உயரிய மதிப்பை வெளிப்படுத்தினார். பிரமிட் தியான சிஸ்டத்தை பின்பற்றுபவர். இவரிடம் மன அழுத்தம், மன மாற்றங்கள் ஏதுமில்லை. இதற்கு காரணம் இவர் செய்து வரும் தியானம். தொடர்ந்து தியானம் செய்து வருவதினால் எவ்வளவு பெரிய திட்டத்தை சிறப்பாக நடத்தி வெற்றி காணச் செய்யும் தகுதி படைத்தவர்.

Vn. சௌபாக்யா
சேவா சங்கல்ப KCGF
சித்த வெங்கட சூரிய பிரகாச ராவ்
சர்வதேச நிர்வாக துணைத் தலைவர்–2025

சர்வதேச நிர்வாக துணைத் தலைவராக பொறுப்பு வகிக்கும் இவர் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று அனைத்து ஆரிய வைஸ்யர்களையும் சந்திக்க பெரு விருப்பம் கொண்டு தீர்மனாகவே ஏற்றுள்ளார். கள அளவில் எவையெவை தேவையாக இருக்கின்றன என்பதை முழுமையாக அறிந்து கொள்ள விரும்புகின்றார். இதுவரையில் எட்டப்படாத இடங்களில் எல்லாம் வாசவி இயக்கத்தை பரப்பச் செய்வதற்கான செயல் திட்டத்தை இவர் தயார் செய்துள்ளார்.

தயாள குணத்திற்கு சொந்தக்காரர்

பரோபகார சிந்தை கொண்ட குடும்பத்தில் பிறப்பதே ஒரு வரம். குழந்தைப் பருவத்திலிருந்தே தயாள குணம் அமைவது இறைவன் அளித்த ஆசி. ரோட்டரி சங்கங்கள், அரிமா சங்கங்கள் மற்று வாசவி சங்கங்களுக்கு இருபது வருடங்களாக இவர் நிதி கொடுத்து உதவி செய்பவர் போத பிரகாஷ். இப்பண்பினால் VCIன் உயர்மட்டத்தில் நற்பெயர் பெற்றவர்.

- புதிய சங்க விரிவாக்கம் தேவை என VCI அறிவித்ததும் போத பிரகாஷ் வாசவி சங்கம் ராக் கப்புள்ஸ் என்கிற புதிய சங்கத்தை 2011ல் துவங்கி அதன் சார்ட்டர் தலைவரும் ஆனார். 54 தம்பதிகள் வாயிலாக 108 KCGF கொடைகளைத் திரட்டியவர்.
- 2012ல் கேபினெட் செயலாளராக மாவட்ட பொறுப்பு வகித்தவர்.
- 2013ல் மாவட்ட துணை ஆளுநராக பொறுப்பு வகித்த சமயத்தில் பெஸ்ட் டெபுடி கவர்னர் விருதை வென்றவர்.
- 2014ல் சர்தேச திட்ட ஒருங்கிணைப்பாளார் ஆனார்.
- 2019ல் V215A மாவட்ட ஆளுநராக இருந்தபோது தனித்துவமான செயல்களால் ஒவ்வொரு வாசவியனையும் ஊக்குவித்தவர்.
- 2020ல் சர்வதேச இயக்குநர் (பல்துறை) பொறுப்பேற்றார்.
- 2021ல் சர்வதேச இயக்குநர் பொறுப்பேற்றார்.
- 2022ல் சர்வதேச கூடுதல் பொருளாளர் (M) பொறுப்பேற்றார்.
- 2024ல் சர்வதேச துணைச் செயலாளர் மற்றும் சர்வதேச துணைத் தலைவர் பொறுப்பு வகித்தவர்.

Vn. வித்யாசங்கல்ப KCGF
போத சூரிய பிரகாஷ்
சர்வதேச செயலாளர்–2025
(சேவைப் பணிகள்)

பிரச்சனைகளை தீர்ப்பவர்

எந்தவொரு பிரச்சனையாக இருந்தாலும் எளிதாக தீர்வு தருபவர் போத பிரகாஷ் என்று அனைவராலும் போற்றப்படுபவர். மாவட்டத்திலிருந்து எவராயினும் பிரச்சனையைத் தெரிவித்தால் எவருக்கும் சிக்கல் இல்லாமல் தீர்த்து வைப்பவர். என்னை உங்கள் இல்ல விழாக்களுக்கு அழைக்காவிட்டாலும் உங்களுக்கு சிக்கல் ஏற்படும் சமயத்தில் என்னை அழைக்க மறந்து விட வேண்டாம் என்று எப்போதும் கூறும் இயல்பு கொண்டவர் சர்வதேச செயலாளர்–2025 போத சூரிய பிரகாஷ்.

தனிப்பட்ட விவரங்கள்

ராஜமுந்திரியில் பாம்பே டையிங் ஷோரூம் உரிமையாளர். திருப்பதி நகரில் ஒரு பாட்டலிங் யூனிட் உண்டு. ராக் வெல் இன்டர்நேஷனல் பள்ளியை ஹைதராபாத்தில் நடத்துகின்றார். இவரது மனைவி ஸ்ரீமதி சாரதா (அனிதா). இத்தம்பதியருக்கு ஒரு மகனும் மகளும் உண்டு. மகன் சாத்விக்கிற்கு சமீபத்தில் திருமணமாகியது. இவரும் சமூகப் பணிகள் செய்வதற்கு சர்வதேச செயலாளர் (சேவைகள்) பொறுப்பு வகிக்கின்றார்.

பன்முக திறமையாளர்–சர்வதேச பொருளாளர்

ஒரு வாசவியனாக 15 ஆண்டு அனுபவம் கொண்ட தமிழகத்தை சார்ந்த வித்யாசங்கல்ப KCGF ஸ்ரீயோபிலாஷி சுஜாதா ரமேஷ் பாபு தற்போது சர்வதேச பொருளாளர்–2025 பதவி ஏற்றுள்ளார். இவர் பன்முக திறமையாளர். தமிழ்நாடு ஆரிய வைஸ்ய மகிளா சபை, சென்னை கிளையிலிருந்து தனது சேவைப் பயணத்தைத் துவங்கியவர். பின்னர் மோட்டிவேஷனல் உரையாளராகவும், கார்ப்பொரேட் ட்ரெய்னர் மற்றும் ஆங்கராகவும் உயர்ந்தார். இவரது திறமைகளின் வெளிப்பாடுகள் 2025ம் ஆண்டில் சர்வதேச தலைமை குழுவில் அங்கம் வகிக்கச் செய்துள்ளது.

இவரது கணவர் Dr.S.ரமேஷ் பாபு சென்னையில் SPOT ஹாஸ்பிடல்களை 20 வருடங்களாக நடத்தி வருகின்றார். இவற்றின் நிர்வாக இயக்குநர் மற்றும் நிர்வாகி பொறுப்புகளை சுஜாதா ஏற்று கவனித்து வருகின்றார். இவரது கணவர் அளித்த ஊக்கத்தினால் வாசவி சங்கம் 2* KCGF எலைட் சென்னை சங்கத்தில் 2009ல் இணைந்தார்.

- 2015: வாசவி சங்கம் வனிதா எலைட் சென்னை சங்கத்தின் சார்ட்டர் தலைவர்
- 2016: மண்டலத் தலைவர்
- 2017: பிராந்தியத் தலைவர்
- 2018: V502A மாவட்ட ஆளுநர்
- 2019: சர்வதேச இயக்குநர்
- 2020: சர்வதேச கூடுதல் பொருளாளர்
- 2021: சர்வதேச இணைச் செயலாளர்
- 2023: சர்வதேச துணைத் தலைவர் (பல்துறை)
- 2024: சர்வதேச துணைத் தலைவர்
- 2024 MIDCON: சர்வதேச மூத்த துணைத் தலைவர் (பல்துறை)
- 2024: ICON செயலாளர்

Vn. வித்யாசங்கல்ப KCGF
ஸ்ரீயோபிலாஷி
சுஜாதா ரமேஷ் பாபு
சர்வதேச பொருளாளர்–2025

தனது பன்முக திறமைகளுக்குச் சான்றாக எண்ணற்ற விருதுகளை வென்றவர். அவைகளில் சில:

- இண்டியன் அச்சீவர்ஸ் அவார்டு பார் ஹெல்த் எக்ஸெலன்ஸ்
- KTCT அலுமினியிடமிருந்து வனிதா கிஷோரம் அவார்டு
- வொர்ல்ட் ஆரிய வைஸ்ய மகாசபையிடமிருந்து WOW அவார்டு
- ஜெமினி TV நடத்திய கேம் ஷோவில் கோத்ரெஜ் நிறுவனம் அளித்த ஒரு அபார்ட்மெண்ட் பரிசை வென்றவர்

Dr.S.ரமேஷ் பாபு, சுஜாதா தம்பதியருக்கு இரண்டு குழந்தைகள் உண்டு.

எனது குடும்பத்தினர் அளிக்கும் ஒத்துழைப்பினால் நான் ஏற்றுக் கொண்ட பல நிர்வாகப் பொறுப்புகளுக்கிடையிலும் வாசவி இயக்கத்தின் சமுதாய சேவைப் பணிகளை என்னால் சிறப்பாக செய்ய முடிகின்றது என்று ஒரு நிகழ்வில் இவர் தெரிவித்துள்ளார்.

முரளி கிருஷ்ணாவின் தோளில் NRI சங்கங்களின் கொடி

பொதுவாக அயல் நாடுகளில் தங்கி இருப்பவர்கள் தாய் நாட்டை மறந்து விடுவது இயல்பு. அவர்கள் ஒரு வேளை இந்தியாவிற்கு வந்தாலும் சில புனித தலங்களுக்கு சென்று தரிசித்துவிட்டு திரும்பி விடுவார்கள்.

ஆனால் அனைவரும் அவ்வாறு இருப்பது இல்லை. அயல் தேசத்தில் வசித்தாலும் சொந்த மண்ணை மறப்பதில்லை.

நூகுல முரளி கிருஷ்ணா அவ்வகையை சார்ந்தவர். இவர் துபாயில் அரசு பணியில் இருக்கிறார். இவர் அங்கு வாசவி சங்கத்தை துவங்கியது மட்டுமின்றி தாய் நாட்டிற்கு பயனளிக்கும் விதத்தில் இருக்க விரும்புகின்றார்.

இவர் பயணித்த பாதை...

கடப்பா மாவட்டத்தைச் சேர்ந்தவர் நூகுல முரளி கிருஷ்ணா. இவர் தந்தை தங்க நகைகள் வியாபாரம் செய்பவர் (2021 காலமானார்). தனது பட்டப் படிப்பை புலிவெண்டுலாவில் முடித்ததும் ஹைதராபாத் நகருக்குச் சென்று MCA பட்டம் பெற்றார். பிறகு துபாய் சென்றார். அங்கு துபாய் நீர் வளத்துறையில் பணிக்கு அமர்ந்து அங்கேயே வசித்து வருகின்றார். இப்போது IT துறையில் வல்லுநராகி நற்பெயரை பெற்றுள்ளார்.

ஒன்பது வருட பந்தம்...

நல்ல பதவி கிடைத்து வளமாக இருந்த வேளையிலும் இவர் தாய் நாட்டுப் பற்றை துறக்கவில்லை. 2015ல் கெம்பா நாகேஷ்வர் ராவ் சர்வதேசத் தலைவராக இருந்தபோது அவரது தலைமையில் வாசவியன்கள் துபாய்க்கு சுற்றுலா சென்றார்கள். அக்குழுவில் இருகுல்ல ராமகிருஷ்ணாவும் இருந்தார். அப்போது அவர் முரளி கிருஷ்ணாவை சந்திக்க நேர்ந்தது. அவரிடம் துபாயில் வாசவி சங்கத்தை நிறுவ வேண்டும் என்கிற விருப்பத்தைத் தெரிவித்தார். ஆனால் ஒரு அமைப்பை நிறுவ வேண்டுமென்றால் முன் அனுமதி பெற வேண்டியது அங்கு கட்டாயம்.

அச்சமயத்தில் 450 தெலுங்கு குடும்பங்கள் துபாயில் வசித்து வந்தன. முரளி கிருஷ்ணா உரிய அனுமதி பெற்று தெலுங்கு அசோசியேஷனை அங்கு துவங்கினார்.

வாசவி சங்கத்தை நிறுவும் எண்ணம் பாக்கியிருந்தது. இறுதியில் 2020ல் உரிய அனுமதியைப் பெற்று வாசவி சங்கத்தையும் துவங்கினார். இது அவருக்கு பெரிய மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அன்றிலிருந்து

அப்போதிருந்து வாசவி இயக்கத்தின் கொடியை உயர்த்தி பிடிக்கத் துவங்கினார். வாசவி ஜெயந்தி, கார்த்திகா சமாராதனை போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி துபாயில் வசிக்கும் வைஸ்யர்களுடன் தோழமையைப் பெருக்கிக் கொண்டார்.

> ஏழு துபாய் எமிரேட்ஸில் ஏழு புதிய சங்கங்களை துவங்குவது முரளி கிருஷ்ணாவின் முதல் இலக்கு

With wife Smt. Kavitha and Daughters

நான்கு வருடங்களுக்குப் பிறகு 2024ல் இருகுல்ல ராமகிருஷ்ணா 2025ன் சர்வதேசத் தலைவரானதும்அவரை அழைத்தார். "அண்ணா இதுவரையில் நீங்கள் சிறப்பாக செய்துள்ளீர்கள், இவ்வருடத்தில் ஒரு முக்கியப் பொறுப்பை ஏற்க வேண்டும்" என்று இருகுல்ல கூறினார்.

ஏற்கெனவே தலைமைப் பண்புகளை கொண்டிருந்த முரளி கிருஷ்ணாவும் புதிய INPன் கோரிக்கையை ஏற்றார். உண்மையில் இருகுல்லவின் சிந்தனை மிக உயரத்தில் இருந்தது. NRI சங்கங்களை மட்டும் இணைத்து புதிய மாவட்டம் V601Aயை துவக்க நினைத்திருந்தார். அதற்கு முரளி கிருஷ்ணாவை ஆளுநராக நியமிக்க நினைத்தார். அவ்வாறே ICONல் மகிழ்ச்சியுடன் சார்டர் ஆளுநராக முரளி கிருஷ்ணா பிரமாணம் ஏற்றார். 2025ல் செய்ய வேண்டியவைகளை முறையாக திட்டமிட்டார்.

செயல் திட்டம் தயார்

புதிய வருடத்தில் எவ்வாறு இயங்க வேண்டுமென்பதற்கு ஒரு செயல் திட்டத்தை உருவாக்கினார்.

- முதல் இலக்கு: ஏழு துபாய் எமிரேட்ஸில் ஏழு புதிய சங்கங்களை துவங்குவது, அதுவும் மார்ச் 31க்குள். இது அவர் விருப்பம்.
- இந்தியாவிலுள்ள ஏதேனும் சங்கம் ஒரு NRI சங்கத்தை துவக்க ஸ்பான்சர் செய்ய வேண்டும். எனவே அவ்வாறு ஸ்பான்சர் செய்யும் சங்கத்திற்கு ரூ.20,000 பரிசளிப்பதாக அவர் அறிவித்துள்ளார். இது இவரது இரண்டாவது இலக்கு.
- தற்போது VCI வழங்கவிருக்கும் ஒரு லட்சம் நோட்டுப் புத்தகங்களுடன் மேலும் ஒரு லட்சம் நோட்டுப் புத்தகங்களை அச்சடித்து தருவதை மூன்றாம் இலக்காக கொண்டுள்ளார். இதற்கு தேவையான தொகை ரூ.20 லட்சங்களை NRIகளிடமிருந்து திரட்ட திட்டமிட்டுள்ளார்.

மகிழ்ச்சியான குடும்பம்

இவரது மனைவி ஸ்ரீமதி கவிதா, MBA பட்டதாரி. இவர்களுக்கு இரண்டு மகள்கள். மூத்தவர் திவ்யா சம்ப்ரிதி, 12ம் நிலை படிக்கிறார். இளையவர் பிரசாந்தி 9ம் நிலை படிக்கிறார்.

துபாய் அரசின் துறை ரீதியில் இவ்வருட கவர்மெண்ட் எக்ஸெலென்ஸ் அவார்டிற்கு முரளி கிருஷ்ணாவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. சிறப்பாக செயல்படும் துபாய் அரசு ஊழியர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகின்றது.

அன்னை தெய்வம் வாசவி மாதா முரளி கிருஷ்ணாவின் குடும்பத்திற்கு அருளாசிகளை வழங்குவார் என்பது நிச்சயம்.

2025ம் வருடத்தின்

ஆர்வம் மிக்க புதிய தலைமைகள்

பழைய மற்றும் புதிய தலைமைகள் கலந்த கலவையாக GATE & RCTS.

கள அளவில் தலைமைப் பண்புகளை பெருக்குவதே இரண்டு நாட்கள் பயிற்சி வகுப்பின் நோக்கம். ஆளுநர்கள், துணை ஆளுநர்கள், கேபினெட் செயலாளர்கள், கேபினெட் பொருளாளர்கள் மற்றும் பிராந்திய தலைவர்களுக்கு சர்வதேசத் தலைவர்–2025, சர்வதேச தலைமை குழுவினர்கள், INP-2024 மற்றும் தலைமை குழு–2024 உடன் முன்னாள் INPகள் பயிற்சிகளை வழங்குவார்கள்.

இப்பயிலரங்கம், டிச. 29, 30 தேதிகளில், செகந்திராபாத் மினர்வா கிராண்ட் ஹோட்டலில் நடத்தப்பட்டது. செகந்திராபாத் மாவட்டத் தலைவர்கள் உற்சாகத்துடன் GATE & RCTS பயிற்சி வகுப்பில் பங்கேற்றார்கள். அமைப்பின் நிர்வாகத்திலும், அன்றாட வாழ்க்கையிலும் எவ்வாறு சிறப்பாக செயல்பட வேண்டுமென்பதற்கான பயன் தரும் பயிற்சிகளை VCI உயர் தலைவர்கள் பயிற்றுவித்தார்கள்.

யார் என்ன கூறினார்கள்?

- **ட்ரெய்னிங்ஸ் கமிட்டி சேர்மன் பாத சுதர்ஸன்:** இந்த மாவட்டத் தலைவர்களை நேரில் காணும் பொழுது மிகுந்த உற்சாகத்தைத் தருகின்றது; 2025ம் ஆண்டில் நம் வாசவி சேவை அமைப்பை முன்னெடுத்துச் செல்வார்கள் என்கிற நம்பிக்கை கூடுகின்றது.
- **INP-2024, ரவிச்சந்திரன்:** நமது கனவுகள் யாவற்றையும் நனவாக்க ஆளுநர்கள் ஆகிய நீங்கள் வந்துள்ளீர்கள். உங்கள் இலக்குகளை நீங்கள் வெல்வீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.
- **INP-2025, இருகுல்ல ராமகிருஷ்ணா:** IEC அதிகாரிகள் முதல் கள அளவில் தலைவர்கள் வரை பணிகள் ரெடி. 70,000 வாசவியன்களுக்கான 50 திட்டங்கள் உள்ளன. இவைகளை நிறைவேற்றும் நோக்கத்தில்தான் நான் பதவியேற்றேன்.
- **பைலட் ஃபேக்கல்டி கெம்பா நாகேஷ்வர் ராவ்:** இந்தியாவில் இயங்கும் இதர தன்னார்வ அமைப்புகளுடன் ஒப்பிடும் போது நமது அமைப்பே உயரிய ஒழுங்கில் செயலாற்றுகின்றது. நீங்கள் அனைவரும் அவ்வகையிலேயே செயலாற்ற வேண்டும்
- **திரைப் புகழ் நடிகர், பேச்சாளர் பிரதீப்:** நல்ல தலைவர்கள் அனைவரும் புதிய கருத்துக்களை படிக்க எப்போதும் தயாராக இருப்பார்கள்.

பயிற்றுவிக்கப்பட்ட தலைப்புகள்

- **இருகுல்ல ராமகிருஷ்ணா:** தீம் & ப்ரோகிரம்ஸ்
- **நூலி வெங்கடரமண மூர்த்தி:** பல சந்தர்ப்பங்களில் பின்பற்ற வேண்டிய சீர்மிகு நெறிமுறைகள்.
- **அகிர் வெங்கடேஷ்:** தலைமைக்கான பண்புகள், தகுதிகள்.
- **AVSN குப்தா:** காலை முதல் மாலை வரை திட்டம் குறித்த அறிமுகம்.
- **Dr. வேமுல ஹஜராத்தைய்ய குப்தா:** KCGF நன்கொடைகளின் சிறப்புகள்.
- **Dr. பிரித்திவிராஸ் வல்லால:** 21ம் நூற்றாண்டின் தலைமைப் பண்புகள்.
- **Dr.H.S.நாகபூஷணா:** SWOT அனாலிஸிஸ்
- **Dr.அகெல்ல ராகவேந்திரா:** மோட்டிவேஷன் செஷன்.
- **Dr.அகெல்ல ராகவேந்திரா:** மோட்டிவேஷன் செஷன்.

தலைமை குழு உறுப்பினர்கள் என்ன கூறினார்கள்?

- **கர்லபடி ஸ்ரீனிவாசுலு:** கேபினெட் செயலாளரின் கடமைகள், பொறுப்புகள்.
- **போத சாய் சூரிய பிரகாஷ்:** கேபினெட் செயலாளரின் கடமைகள், பொறுப்புகள்.
- **சுஜாதா ரமேஷ் பாபு:** கேபினெட் பொருளாளரின் கடமைகள்.
- **கஜ்ஜல ராமகிருஷ்ணா:** பிராந்தியத் தலைவரின் கடமைகள், பெறுப்புகள்.

இறுதிப் பயன் என்ன?

- இரண்டு நாள் பயிலரங்கில் பயின்றதும் அனைத்து தலைவர்களும் புது உற்சாகம் பெற்றனர். அதே உற்சாகத்துடன் 2025ல் உழைக்கத் தயாரானார்கள். பங்கேற்ற அனைவருக்கும் VIPRO கையேடு, பின்கள், வருட செயல் திட்டங்கள், நாட்காட்டி நிகழ்ச்சிகள் மற்றும் புது வருட பரிசுகள் வழங்கப்பட்டன.

நாம் நமது புதிய ஆளுநர்களை சந்திப்போம்

2024, அக்டோபர் மாதத்தில் 2025ம் ஆண்டின் புதிய மாவட்டத் தலைவர்கள் சத்தியப் பிரமாணம் ஏற்றார்கள். புதிய ஆளுநர்கள் ஏற்கெனவே பதவியேற்றிருந்தார்கள். VCI உயர் தலைவர்கள், சர்வதேச பார்வையாளர்கள் மற்றும் மாவட்ட அதிகாரிகள் முன்னிலையில் 2024ம் ஆண்டின் ஆளுநர்கள் புதிய ஆளுநர்களுக்கு பிரமாணம் செய்து வைத்து பொறுப்புகளை ஒப்படைத்தார்கள். சில வாசவி வாசவி மாவட்டங்களில் கேபினெட் அதிகாரிகளும் ஆளுநர்களுடன் பதவியேற்றனர்.

V103A

Vn. கோல்டன் * KCGF கட்டு ராணி

2024, அக்டோபர் 20 அன்று நிஜாமாபாத்தில் Vn. கோல்டன் *KCGF கட்டு ராணி V103A மாவட்டத்தின் புதிய ஆளுநராக பதவிப் பொறுப்பேற்றார். காடே சுதர்ஸன் குப்தா பதவி பிரமாண நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார்.

V104A

Vn. கிரவுண் * KCGF ரச்சகொண்ட விஜயலக்ஷ்மி

நல்கொண்டாவில் DISCON நடைபெற்ற சமயத்தில் Vn. கிரவுண் ஸ்டார் KCGF ரச்சகொண்ட விஜயலக்ஷ்மி பிரமாணம் ஏற்று 2025ன் புதிய ஆளுநர் ஆனார். 2024ன் ஆளுநர் ரச்சபொண்ட கமலாகர் அவருக்கு பிரமாணம் செய்து வைத்தார்.

V106A

Vn. கோல்டன் * KCGF கோட்டா கோட்டீஸ்வர் ராவ்

டிச.1 அன்று கம்மத்தில் நடைபெற்ற DISCONல் Vn.கோல்டன் ஸ்டார் KCGF கோட்டா கோட்டீஸ்வர் ராவ் பிரமாணம் ஏற்று 2025ன் புதிய ஆளுநர் ஆனார். ஆளுநர் கும்மாடவெல்லி ஸ்ரீனிவாஸ் அவருக்கு பிரமாணம் செய்து வைத்தார்.

V107A

Vn. சில்வர் * KCGF இல்லெந்துல கிஷோர்

V107A மாவட்டம், நவ.24 அன்று கரிம்நகரில் DISCON நடைபெற்றது. Vn.சில்வர் ஸ்டார் KCGF இல்லெந்துல கிஷோர் பிரமாணம் ஏற்று 2025ன் புதிய ஆளுநர் ஆனார். ஆளுநர் ஜெயந்தம் மாதவி அவருக்கு பிரமாணம் செய்து வைத்தார்.

V108A

Vn. சில்வர் * KCGF மிடிதோட்டி ராதாகிருஷ்ணா

V108A மாவட்டம், நவ.30 அன்று DISCON நடைபெற்றது. Vn.சில்வர் ஸ்டார் KCGF மிடிதோட்டி ராதாகிருஷ்ணா பிரமாணம் ஏற்று 2025ன் புதிய ஆளுநர் ஆனார். ஆளுநர் பில்லகண்டி ஜகதீஷ் அவருக்கு பிரமாணம் செய்து வைத்தார்.

Vn. கோல்டன் * KCGF ஸ்ரீயோபிலாஷி தமன்ன அமர்நாத்

2024, நவ. 17 அன்று வைசாக்கில் நடைபெற்ற V201A DISCONல் Vn. கோல்டன் *KCGF ஸ்ரீயோபிலாஷி தமன்ன அமர்நாத் 2025ன் புதிய ஆளுநராக பதவியேற்றார். ஆளுநர் அட்டகல்ல வீவீ குப்தா பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

Vn. வித்யாசங்கல்ப KCGF அன்னம் சாய் சுனிதா

2024, நவ. 30 அன்று விஜயவாடாவில் நடைபெற்ற V203A DISCONல் Vn.வித்யாசங்கல்ப KCGF ஸ்ரீஅன்னம் சாய் சுனிதா 2025ன் புதிய ஆளுநராக பதவியேற்றார். 2024ன் ஆளுநர் கோட்டா கணேஷ் அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

Vn. கோல்டன் * KCGF முனகல சிரஞ்ஜீவி

2024, நவ. 17 அன்று சிலகலூரிபெட்டில் நடைபெற்ற V204A DISCONல் Vn.கோல்டன் *KCGF முனகல சிரஞ்ஜீவி 2025ன் புதிய ஆளுநராக பதவியேற்றார். 2024ன் ஆளுநர் கொலிசெட்டி சிவசுப்பரமணியம் அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

Vn. KCGF சுந்துரு காயத்ரி

2024, நவ. 17 அன்று ஓங்கோலில் நடைபெற்ற V205A DISCONல் Vn. KCGF சுந்துரு காயத்ரி 2025ன் புதிய ஆளுநராக பதவியேற்றார். 2024ன் ஆளுநர் பேர்ல சத்யநாராயணா அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

Vn. 2* KCGF முச்சர்ல ராதாகிருஷ்ணா

2024, நவ. 27 அன்று புட்டபர்த்தியில் நடைபெற்ற V206A DISCONல் Vn.2*KCGF முச்சர்ல ராதாகிருஷ்ணா 2025ன் புதிய ஆளுநராக பதவியேற்றார். 2024ன் ஆளுநர் சுந்துரு வெங்டேஷ்வர் ராவ் அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

Vn. கந்துகூரி சுப்பராமைய்யா

2024, நவ. 09 அன்று கர்நூலில் நடைபெற்ற V209A DISCONல் Vn.கந்துகூரி சுப்பராமைய்யா 2025ன் புதிய ஆளுநராக பதவியேற்றார். 2024ன் ஆளுநர் ஜெயந்தி வெங்டேஷ்வர்லு அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

Vn. கோல்டன்* KCGF மானேபள்ளி பங்கார்ராஜு

2024, அக். 10 அன்று தல்லரேவுவில் நடைபெற்ற V210A DISCONல் Vn.கோல்டன்*KCGF மானேபள்ளி பங்கார்ராஜு 2025ன் புதிய ஆளுநராக பதவியேற்றார். 2024ன் ஆளுநர் கோகவரம் சுபன் அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

Vn. M.தேஜேஸ்வி குப்தா

2024, நவம்பர் மாதத்தில் பைலேருவில் நடைபெற்ற V211A DISCONல் Vn.M.தேஜஸ்வி குப்தா 2025ன் புதிய ஆளுநராக பதவியேற்றார். 2024ன் ஆளுநர் சோமிசெட்டி சுரேஷ் அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

பக்கம் 34ல் மேலும் சில ஆளுநர்கள்

வெற்றியின் வரலாறு

காலங்களாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கை: மானேபள்ளி ஜுவல்லர்ஸ்

ஹைதராபாத் நகரின் மகுட மணிகளாக எவையெவை கருதப்படுகின்றன? என கேட்டால் அதற்கு உடனடியான விடை: சார்மினார், கோல்கொண்டா, ராமோஜி பிலிம் சிட்டி என்று கூறுவார்கள். அதே போல சரித்திரப் புகழ் பெற்ற இந்நகருக்கு தங்க ஒளி பாய்ச்சுவது எது?

இக்கேள்வியைக் கேட்டதும் அனைவரின் கண்களும் மானேபள்ளி மலை அமைந்துள்ள புவனகிரி நோக்கித் திரும்பும். இங்கு மானேபள்ளி குடும்பத்தினர் கட்டிய அழகிய கலைநயம் மிக்க ஆலயத்தில் அன்றாடம் பக்தர்களுக்கு கலியுக தெய்வம் வெங்கடேஷ்வர ஸ்வாமி அருள் பாலிக்கிறார். இம்மலைக்கு ஸ்வர்ணகிரி என்ற பெயரும் உண்டு. ஏராளமானோர் வருகை தந்து ஸ்வாமியை தரிசிக்கிறார்கள். மானேபள்ளி ராமாராவ் குடும்பம் தங்க நகை வியாபாரத்தை 150 வருடங்களாக தொடர்கின்றது. ராமாராவின் மனைவி மரணத்தின் விளிம்பில் ஊசாலாடியபோது வெங்கடேஷ்வர ஸ்வாமியின் அருளால் மீண்டு வந்தார். அதற்கு நன்றி பாராட்டும் வகையில் அளப்பரிய பக்தியுடன் ஸ்வாமிக்கு மானேபள்ளி குடும்பம் ஆலயம் கட்டிக் கொடுத்துள்ளது. மானேபள்ளி ராமாராவிற்கு கோபிகிருஷ்ணா, முரளிகிருஷ்ணா என இரண்டு மகன்கள். இவ்விருவரும் ஆலயம் கட்டுவதற்கு அதிக சிரத்தை எடுத்தார்கள். வெங்கடேஷ்வர ஸ்வாமியுடன் பல தெய்வங்களையும் வாசவி மாதாவையும் எழுந்தருளச் செய்துள்ளார்கள்.

மானேபள்ளி ஜுவல்லர்ஸ்: 150 வருட வரலாறு

ஒரு வியாபாரத்தை பத்து வருடங்கள் தொடர்ந்து நடத்துவதை பலர் கடினமாக உணர்கிறார்கள். சிலருக்கு ஒரு வருடம் நடத்துவதே கடினமாக இருக்கும். குறிப்பாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கை குறையாமல், காலத்திற்கு ஏற்ப மாறி வரும் பாணிகளை பின்பற்றி நூற்றி ஐம்பது வருடங்கள் ஒரு தொழிலை தடையின்றி நடத்தி வருவதென்பது மிக அரிய காரியம்.

இவ்வகையில் ஒரு வெற்றி வரலாற்றை அறியும்போது இது எப்படி சாத்தியமானது என்பதை தெரிந்து கொள்ளும் ஆவல் நம்மிடம் பொதுவாக எழும். ஹைதராபாத் மக்கள் இதயங்களில் அப்படி ஒரு நம்பிக்கையை மானேபள்ளி குடும்பம் விதைத்துள்ளது.

தலைநகரில் வசிக்கும் இவர்களின் குடும்பப் பெயர் மானேபள்ளி. மானேபள்ளி ஜுவல்லர்ஸின் அதிபரின் பெயர் மானேபள்ளி ராமாராவ். 1980ல் இவரது முப்பாட்டனார் தங்க நகை வணிகத்தை நிஜாம்களின் தலைநகரான ஹைதராபாத்தில் துவங்கினார். அப்போதிருந்தே தங்க நகை வணிகத்தில் ஆரிய வைஸ்யர்கள் கோலோச்சி வந்துள்ளார்கள்.

இவ்வாறு நூற்றி இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு மானேபள்ளி ராமாராவால் துவங்கப்பட்ட வணிகம் இன்றும் நான்காவது தலைமுறையாக தொடர்கின்றது.

Vn.மானேபள்ளி ராமாராவ்

125 வருடங்களைக் கடந்து நான்காவது தலைமுறையாக மானேபள்ளி ஜுவல்லர்ஸ். தலைமுறைகள் மாறினாலும் வாடிக்கையாளர்களின் நம்பிக்கை மாறாமல் உள்ளது

இது ஒரு வணிகம் அல்ல பெரியதொரு தொழிற்சாலையின் வரலாறு என்று மானேபள்ளி ராமாராவ் கூறுகின்றார். இவ்வணிகத்தில் தொழிற்சாலையும் இணைந்து பயணிக்கின்றது என்கிறார்.

நிஜாம் நவாப்களுக்கு முத்துக்கள் மீது பேரார்வம் உண்டு. அதுவே இவ்வணிகம் காலங்கலாள வளர்வதற்குக் காரணம். இந்நகரில் முத்து வணிகம் தொடர்ந்து பெருகி வருகின்றது. அந்நாட்களிலிருந்தே நம் தேசத்தின் மிகப் பெரிய பிரபலங்கள் இந்நகருக்கு வருகை தந்து முத்துக்கள் பதித்த நகைகளை வாங்கிச் செல்வது வழக்கமாக இருக்கின்றது.

தங்க கட்டுப்பாடு உருவாக்கிய சிக்கல்கள்

தங்க நகைகளின் மீதுள்ள மக்களின் மோகம் இவ்வணிகம் செழிப்பதற்கு மூல காரணமாகும். மானேபள்ளி ராமாராவின் தந்தை மானேபள்ளி வெங்கட சுப்பய்யா (லேட்) 1973ல் வணிகப் பொறுப்பை ஏற்றார்.

அச்சமயத்தில் தங்க கட்டுப்பாடு நம் நாட்டில் அமுலில் இருந்தது. இதனால் தங்கம் வாங்குவதிலும் விற்பதிலும் ஏராளமான கட்டுப்பாட்டு விதிகள் நிலவியது. தங்க நகைகள் வியாபரத்திலும் சுணக்கம் ஏற்பட்டது. மானேபள்ளி குடும்பம் ஸ்டீல் வணிகத்தையும் எடுத்துக் கொண்டது. 1963லிருந்து 1990 வரையில் தங்க கட்டுப்பாடு தொடர்ந்தது. இந்நிலையில் மானேபள்ளி தங்க வணிகத்துடன் ஸ்டீல் வணிகத்தையும் மிகுந்த சிரமத்துடன் நடத்தி வந்தார்கள்.

சில வருடங்களுக்குப் பிறகு ஸ்டீல் வணிகத்தை கைவிட்டு முழுதாக தங்க நகைகள் வணிகத்தின் மீது கவனம் செலுத்தினார்கள். 1991ல் பிரதமர் P.V. நரசிம்மராவ் தங்க கட்டுப்பாட்டை தேசத்திலிருந்து விலக்கினார். இந்த சலுகையினால் பல தரப்பு தொழில்கள் பயன்பெற்று மேம்படத் துவங்கின. இவ்வாறு 18 ஆண்டுகள் அனுபவத்தில் மானேபள்ளி ராமாராவ் தங்க நகைகள் வணிகத்தில் வெற்றி பெற்று வளர்ச்சி குன்றாமல் தொழிலை நடத்தி வருகின்றார்.

வாடிக்கையாளர்களின் நம்பிக்கையே மூலதனம்

ஒவ்வொரு தொழிலும் செழிக்க ஒரு பிரதான விஷயம் அடிப்படையாக இருக்கும். வாடிக்கையாளர்களின் அசையாத நம்பிக்கையே தங்க வணிகத்தின் அடிப்படை. செலுத்தும் தொகைக்கு நிகரான தரமுள்ள நகைகளை மானேபள்ளி குடும்பம் வழங்குகி நம்பிக்கையை ஸ்திரமாக்கிக் கொண்டது. BES-ஹால் மார்க் முத்திரையை அரசு அறிமுகமாக்கியதும் மானேபள்ளி உடனடியாக அதை கடைபித்தது.

தங்க நகைகள் தயாரிக்கப்பட்டதும் ஒன்றிய அரசு சார்ந்த தனி நிறுவனம் நகைகளை பரிசோதித்து தரத்தை நிர்ணயித்து தேதியை குறிப்பிட்டு ஹால் மார்க் முத்திரையை வழங்கும். நகரில் முதன்முதலில் ஹால் மார்க்குடன் நகைகளை விற்கும் நிறுவனமாக மானேபள்ளி ஜுவல்லர்ஸ் இருந்ததினால் ஏராளமான வாடிக்கையாளர்கள் குவிந்தார்கள். இவ்வகையில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை மானேபள்ளி குடும்பம் வளர்த்துக் கொண்டு இன்று இந்தளவில் மிக உச்சத்தில் இயங்கி வருகின்றது. மாறி வரும் மக்களின் விருப்பத்திற்கேற்ற கவரும் வடிவில் புது புது ரகங்களில் தயாரித்து ஷோ கேஸ்களில் காட்சிக்கு வைப்பதினால் வாடிக்கையாளர்களும் புதிய டிசைன்களை உடனே தெரிந்து கொள்ள முடிகின்றது என்று அவர்கள் கூறினர். இவ்வணிகத்தை நடத்துவதற்கு ஒவ்வொரு நிலையிலும் பல வகைகளில் திறமை பெற்றிருக்க வேண்டும் அப்போதுதான் வளர்ச்சியும் இருக்கும் நிலைத்திருக்கவும் முடியும் என்றும் கூறினார்கள்.

ஒரு வாசவியனாக சேவைகள்

தற்போது மானேபள்ளி ராமாராவிற்கு வயது 67. சமீபத்தில் அவரது ஷஷ்டியப்தபூர்த்தி நடைபெற்றது. தனது வணிகப் பொறுப்புக்களை மகன்களிடம் ஒப்படைத்துள்ளார். இரு மகன்களும் தங்களது படிப்பை முடித்துவிட்டு தந்தையிடம் வணிக நுணுக்கங்களை கற்றுத் தேர்ந்து விட்டார்கள். முரளிகிருஷ்ணாவும் கோபிகிருஷ்ணாவும் புதிய பாணியில் வணிகத்தை கவனிக்கின்றார்கள். மானேபள்ளி ராமாராவ் முற்றிலுமாக விலகாமல் தனது மகன்களுக்கு ஆலோசனைகளை வழங்குகின்றார். VCின் சர்வதேச நிர்வாக துணைத் தலைவர் பொறுப்பேற்று சேவை பணிக்களுக்கு நேரத்தை செலவிடுகின்றார். இரட்டை நகரில் பல ஷோ ரூம்கள் இருந்தாலும் மானேபள்ளி ஜுவல்லர்ஸில் மக்கள் கூட்டம் குறையவில்லை. இதற்கு காரணம்: ஹைதராபாத் மக்களின் ஆன்மீக பயனிற்காக ஸ்வர்ணகிரி மலையில் வெங்கடேஷ்வர ஸ்வாமிக்கு ஆலயத்தை மானேபள்ளி குடும்பம் கட்டிக் கொடுத்ததுதான்.

ICON 2024 The LEGEND மதுரை

ஆலய தரிசனம்,

தமுக்கம் ஹால் வரவேற்பு

அன்பு சகோதரனின் கட் அவுட்

வாசவி மாதாவின் நல்லாசிகள்

மதுரையின் இனிமையான நினைவுகள்

தமிழ்நாட்டின் ஆன்மீக புனித தலங்களில் ஒன்று மதுரை. இந்திய அளவிலும் புகழ் பெற்ற புண்ணிய தலம் இது.

வங்காள விரிகுடாவில் மையம் கொண்ட சூறாவளியால் மதுரையில் கனமழை கொட்டித் தீர்த்தது. தொடர் மழை மக்களின் அன்றாட வாழ்க்கையை பாதித்தது. இடையிடையில் மழை நிற்கும் சிறிது நேர இடைவேளையில் மக்கள் தினசரிக்கான பொருட்களை வாங்கிச் சென்றார்கள். மீண்டும் மீண்டும் பெய்த அடர் மழை மதுரையை தெப்பக் காடாக்கியது. சூறாவளி நேரத்தில் இதுதான் மதுரையின் நிலை. இருப்பினும், கனமழையை பொருட்படுத்தாது பல மாழலங்களிலிருந்து எண்ணற்ற வாசவியன்கள் விமானம், இரயில், பேருந்து மார்க்கமாக மதுரையில் குவிந்தார்கள். பேருந்து நிலையங்களும் இரயில் நிலையமும் வாசவியன்கள் கூட்டம் நிறைத்தது. அவர்கள் தங்களுக்கான லாட்ஜ்களை தேடிச் சென்றடைந்தார்கள். இதர மாநில வாசவியன்கள் எங்ஙனம் மழையில் வந்து சேர்வார்கள் என்று கவலை கொண்டார்கள். டிசம்பர் 14, 15 தேதிகளில் நடக்கும் இந்தியாவின் மிகப் பெரிய தன்னார்வ அமைப்பின் ICON மாநாட்டிற்கு இறுதியில் ஆயிரக் கணக்கான வாசவியன்கள் வந்து சேர்ந்திருந்தார்கள். மதுரைக்கு வருகை தந்த வாசவியன்களை தமிழ் நாட்டு வாசவியன்கள் தொடர் மழைக்கு நடுவிலும் இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தது வழி நடத்தியது அவர்களை வியக்க வைத்தது. மதுரையின் மீனாட்சி அம்மன் ஆலயம் உலகப் பிரச்சித்தி பெற்றது. தினமும் ஆயிரக் கணக்கில் பக்தர்கள் வருகை தருவது வாடிக்கை. இந்நகரைச் சுற்றி தஞ்சாவூர், ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிப்புத்தூர், ராமேஸ்வரம் என பல புண்ணிய தலங்கள் அமைந்துள்ளன. அனைத்தும் சுமார் 200 கி.மீ .தொலைவில் உள்ளன. எனவே இரண்டு நாட்களுக்கு முன்னதாக மதுரை மாநாட்டிற்கு வரும் வாசவியன்கள் தங்கள் குடும்பத்துடன் இந்த ஆலயங்களை தரிசிக்கலாம்.

சிவ சிவ சங்கரா

சிறப்பான வரவேற்பு

அரங்கு நிறைந்த கூட்டம்

- மீனாட்சி ஆலயத்தின் வடக்கு வாசலுக்கு அருகில் தமுக்கம் மைதானம் உள்ளது. இங்கு 6000 நபர்கள் பங்கேற்கும் வகையில் ஹால்கள் உள்ளன. எண்ணற்ற வாசவியன்கள் அமர்ந்து பார்க்க ஒரு ஹாலில் LED திரை அமைக்கப்பட்டிருந்தது. 3-4 ஆயிரம் வாசவியன்கள் அமர்ந்து உணவருந்த மற்றொரு ஹால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- ஹாலின் நுழைவு வாயிலில் இறைவன் கணபதி தனது தாய் தந்தையர் பார்வதி பரமசிவனை வலம் வருவது போன்ற சிலைகள் இருந்தன. அதன் எழில் பார்வையாளர்களைக் கவர்ந்தது.
- ஹாலின் உள்ளே அபயஹஸ்தம் காட்டிய வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் சிலை இருந்தது. உள்ளே நுழையும் வாசவியன்கள் அம்மனுக்கு நமஸ்காரம் செய்த பிறகே மேடை நோக்கிச் சென்றார்கள்.
- ஹாலுக்குள் INP-2024 R.ரவிச்சந்திரனின் வருகை பெருத்த உற்சாகத்தை கிளப்பியது. அவர் தனது மனைவி மற்றும் பேரக் குழந்தை சகிதம் சூரிய ரதத்தில் அமர்ந்து உள்ளே வந்த காட்சி ICONனின் சிறப்புக் காட்சியாக அமைந்தது. 2024ம் ஆண்டில் அவர் சாதித்ததை கருத்தில் கொண்ட வாசவியன்கள் அனைவரும் எழுந்து நின்று பலத்த கரவொலி எழுப்பி உற்சாகமாக அவர்களை வரவேற்றனர்.
- நிகழ்ச்சியின் இரண்டாம் நாளன்று பத்து ரூபாய் நாணயங்களால் ரவிச்சந்திரனுக்கு துலாபாரம் கொடுக்கப்பட்டது. அவரது எடைக்கு நிகரான நாணயங்களின் மதிப்பு ரூ.1,20,000/- ஆக காட்டியது. இத்தொகை திருப்பதியில் அன்னதானத்திற்காக செலவிடப்படும்.
- மீனாட்சி அம்மன் ஆலயத்தில் வாசவியன்களுக்காக சிறப்பு தரிசன டிகெட்டுகளை வழங்கியிருந்தது அனைத்து வாசவியன்களையும் பெரிதாக மகிழ்வித்தது.
- மாவ. V217A ஆளுநர் புவ்வாட வெங்கட நாராயணா தேச பக்தியுடன் தேசியக் கொடியை ஏந்தி வந்தார். ரவிச்சந்திரனின் மகளுடன் IEC அதிகாரி சுரேஷின் மருமகள் நிவேதா வாசவி கொடியை ஏந்தி வந்து VCIன் முதல் பெண் சித்ரா வசம் ஒப்படைத்தார்கள்.
- முன்னாள் INPகள் மேடையில் அமர்வதற்கு INP-2024 ரவிச்சந்திரன் அற்புதமாக ஏற்பாடு செய்திருந்தார். அவர்கள் அனைவரும் ரதத்தில் அமர்த்தி மலர்கள் தூவி மேடைக்கு அழைத்து வரப்பட்டார்கள்.
- ரவிச்சந்திரன் தமிழ் நாட்டைச் சேர்ந்தவராகவே இருந்தாலும் தலைமை குழு உறுப்பினர்களுடன் சத்தியப் பிரமாணத்தை தெலுங்கில் ஏற்றார். அவரது தெலுங்கு சொல்லாட்சி கேட்டவர்களை வியக்க வைத்தது.
- மதுரை மாநகரில் மூன்று நாட்கள் இடைவிடாது பெய்து வந்த கனமழை ICON நடைபெற்ற 14, 15 தேதிகளில் பெய்யாமல் நின்றது. இதை ஒரு அரிய சம்பவமாகவே வாசவியன்கள் போற்றினார்கள்.

போட்டோ ஷூட்

அன்புச் சகோதரன் தன் அன்பு மகனுடன்

இங்கு நாமும் ஒரு போட்டோ எடுப்போம்

நான்கு மாநில உணவுகள்

உற்சாகமான பங்கேற்பாளர்கள்

VCI, சமுதாய மேம்பாட்டிற்காக

சர்வதேசத் தலைவர் -2024
R.ரவிச்சந்திரன்

சர்வதேசத் தலைவராக நான் தொலைதூர கிராமங்கள் உட்பட 1,50,000 கி.மீ பயணம் செய்து வாசவியன்களின் இதயங்களை வென்றேன் என்று INP-2024 டயமண்ட் ஸ்டார் KCGF ரவிச்சந்திரன் கூறினார். ICON மேடையில் அவர் பிரதான உரையாற்றினார். நான் சர்வதேச பொருளாளர், செயலாளர்களுடனும் பயணம் செய்திருக்கிறேன், ஆனால் நான் INP-2024ஆக பயணித்தது வேறு வகையில் சிறப்பானது என்றும் கூறினார். மிக தொலைவில் கிராமங்களில் இருந்த வாசவி சங்கங்களுக்கு INPயாக சென்று சேவைப் பணிகளில் பங்கேற்றேன் என்றும் தெரிவித்தார். அவரது உரையில் சில குறிப்புகள்:

- நான் கடந்த ஐந்து வருடங்களில் ஆறு மாநிலங்களிலும் பயணம் செய்திருக்கிறேன், அங்கிருக்கும் வாசவியன்களுடன் நெருக்கமாக பழகினேன். இந்த ICON மாநாட்டில் 6000 வாசவியன்கள் பங்கேற்று இருப்பது அந்த பயணங்களால்தான் என்பதை உணர்கிறேன் என்று கூறினார்.
- நாம் அனைவரும் இணைந்து முந்தைய சாதனைகள் எதையும் முறியடிக்கவில்லை ஆனால் புதிய சாதனைகளைப் படைத்துள்ளோம் என்று நான் எனது ஆரம்பத்திலிருந்தே கூறி வருகிறேன்.
- நாம் காலை முதல் மாலை வரை நிகழ்ச்சியில் முற்று முழுதாக சேவைப் பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தினோம். மொத்தமாக ரூ.7 கோடி மதிப்பில் சமுதாயத்திற்கு சேவைகளாக வழங்கினோம். மெகா இரத்த தான முகாம்கள் மூலமாக 5500 யூனிட் இரத்தம் சேகரித்து இரத்த வங்கி அதிகாரிகளிடம் கொடுத்தோம்.
- ஆறு மாநிலங்களின் ஆயிரக் கணக்கான வாசவி சங்கங்கள் உற்சாகத்துடன் ஒரு கோடி விதைப் பந்துகளை தயாரித்து தூவிப் பரப்பினோம். இதை ஒரு திருவிழாவாகவே நடத்தினோம். இதன் பயனாக எலைட் புக் ஆப் வொர்ல்ட் ரெக்கார்ட்ஸில் சாதனையாக பதிவு செய்துள்ளோம்.
- வாரங்கல்லில் நடைபெற்ற KCGF நைட் விழாவில், சில்வர் ஸ்டார் மற்றும் அதற்கு மேல் நிலை KCGF கொடையாளர்களையும், 25 ஆண்டுகள், அதற்கும் மேலாக தடையின்றி இயங்கும் சங்கங்களையும் பாராட்டி கௌரவித்தோம்.

வருடம் முழுதும் பணியாற்றினார்

- எனது திருமண ஆண்டு தினத்தில், பிரத்யேகமாக பெண்களின் நலனுக்காக அருகிலிருக்கும் மருத்துவ மனைகளின் துணை கொண்டு மருத்துவ பரிசோதனைகளை இலவசமாக வழங்கினோம்.
- 5000 விதைப் பந்துகள் இலக்கை அடைந்த சங்கங்களுக்கு தையல் இயந்திரம் கொடுத்தோம். அவைகளை ஏழைப் பெண்களின் வாழ்வு ஆதாரத்திற்கு உதவ சங்கங்கள் வழங்கி சேவை செய்தன.
- வாசவியன்கள் உடல் நலம் கருதி ஒரு மாத வாக்கத்தான் போட்டியை நடத்தினோம். சுமார் ஆயிரம் வாசவியன்கள் நான் நிர்ணயித்த இலக்கான 100 கி.மீ நடந்து ஒத்துழைப்பு நல்கினார்கள்.
- சர்வதேச விளையாட்டு போட்டிகள் திருச்சி நகரில் துறை வல்லுநர்கள் பாராட்டும் வகையில் நடத்தினோம்.
- வருமான வரித் துறையிடமிருந்து 12A மற்றும் 80G வரி விலக்கு பெற்றோம். இது VCIன்63 வருட வரலாற்றில் ஒரு மைல் கல் சாதனையாகும்.
- KCGF நன்கொடைகள் மீது கவனம் செலுத்தி, 8 சேவா சங்கல்ப, 43 வித்யா சங்கல்ப மற்றும் 11,111 KCGF கொடைகள் திரட்டினோம்.
- ஸ்ரீயோபிலாஷி நிதியிலிருந்து வித்யாநிதி திட்டத்தை அறிமுகம் செய்து சிறப்பாக செயல்படுத்தினோம். இதன் வாயிலாக ஆரிய வைஸ்ய மாணாக்கர்களுக்கு கல்வி நிதி வழங்கப்படுகின்றது.
- VKSP திட்டத்தில் சில மாறுதல்களைக் கொண்டு வந்தோம். குறிப்பாக வயது வரம்பை 61 ஆக உயர்த்தினோம். சஸ்பென்ஸ் கணக்கிலுள்ள ரூ.20 கோடிக்கான கணக்கு விவரங்கள் புதிய தலைவர்–2025 வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- நிரந்தரத் திட்டத்தின் கீழ் 23 கழிப்பறைகள் கட்டப்பட்டன. அவற்றை எனது நல்லெண்ண விஜயத்தின்போது திறந்து வைத்தேன். 13 கழிப்பறைகள் தமிழ் நாட்டில் கட்டப்பட்டுள்ளன.
- டிசம்பர் 10 அன்று திருப்பதியிலுள்ள புதிய கட்டிடத்தில் 'அன்ன சமாராதனா' எனும் திட்டத்தை அறிமுகமாக்கினோம். இந்த வருடம் முழுதும் ஆரிய வைஸ்யர்களின் நலன்களுக்காகவும் VCIன் வளர்ச்சிக்காகவும் நான் பாடுபட்டேன். அனைத்து முன்னாள் சர்வதேசத் தலைவர்களும் எனது சேவைப் பயணத்தில் உடனிருந்து சிறப்பாக ஒத்துழைப்பு நல்கி உதவினார்கள்.

நினைவேந்தல் நிகழ்ச்சியில் காலமான வாசவியன்களுக்கு நெஞ்சார்ந்த அஞ்சலிகள்

ICON மாநாட்டில், 2024ல் காலமான வாசவியன்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. ICONனின் இரண்டாம் நாளன்று காலை 8 மணிக்கு நினைவேந்தல் நிகழ்ச்சி நடந்தது. இந்த நினைவேந்தலுக்கு முன்னாள் INP நூலி வெங்கடரமண மூர்த்தி தலைமை வகித்தார். மற்றொரு முன்னாள் INP Dr.வேமுல ஹஜராத்தைய்ய குப்தா துணைத் தலைவராக இருந்தார்.

ஜனவரியிலிருந்து டிசம்பர் முதல் வாரம் வரையில் காலமான வாசவியன்களின் பெயர்கள் LED திரையில் ஒளிர்ந்தன. நூலி வெங்கடரமண மூர்த்தி வரிசை கிரமமாக பெயர்களை வாசித்தார். அப்போது Dr.வேமுல ஹஜராத்தைய்ய குப்தா பிறப்பு இறப்பு குறித்த இரகசியங்களை பகவத் கீதை ஸ்லோகங்கள் சொல்லி விளக்கினார். இந்நிகழ்வில் மொத்தம் 140 வாசவியன்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

முதலில் IEC அதிகாரிகள், பிறகு ஆளுநர்கள் அதன் பிறகு வாசவியன்கள் என்கிற வரிசையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்ச்சித் தொகுப்பாளர் பல்லாள பிரித்விராஜ் சிறப்பாக வர்ணனை வார்த்தைகளைத் தொகுத்து நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கினார்.

ICON 2024 The LEGEND

சர்வதேசத் தலைவர்-2025

இருகுல்ல ராமகிருஷ்ணா பதவியேற்றார்

மதுரை ICON மேடையில், டிச.14 அன்று, இருகுல்ல ராமகிருஷ்ணா சர்வதேசத் தலைவராக பதவியேற்றார். இந்த நிகழ்வில் ஆயிரக் கணக்கான வாசவியன் தலைவர்கள் பங்கு வகித்தார்கள். அவரது பெயர் சர்வதேசத் தலைவர்-2025 என அறிவித்ததும் தங்கள் புதிய தலைவரைக் காணும் ஆவலில் கூடியிருந்த அனைத்து வாசவியன்களும் ஹாலுக்கு விரைந்து வந்து பார்த்தார்கள்.

- INP ரவிச்சந்திரன் வழங்கிய குறிப்பின்படி, முன்னாள் INP மற்றும் எலெக்ஷன் கமிட்டி சேர்மன் அகிர் வெங்கடேஷ் மற்றும் துணைத் தலைவர் சௌபாக்யா V.ஆதிகேசவன், உறுப்பினர் நூலி வெங்கட ரமண மூர்த்தி தேர்தல் குறித்த பல விவரங்களை அறிவித்தார்கள்.
- 30 வாசவி மாவட்டங்களில், 2025ம் ஆண்டிற்கான ஆளுநர் தேர்தல்கள் ஏகமனதாக தேர்வாகின. ஒரேயொரு மாவட்டத்தில் மட்டும் போட்டியை தவிர்க்க இயலாமல் தேர்தல் நடத்தப்பட்டது. அங்கு தேர்தல் முறையாக அமைதியுடன் நடந்து முடிந்தது.
- சர்வதேசத் தலைவர் மற்றும் சர்வதேச நிர்வாக துணைத்தலைவர் பதவிகளுக்கு மனு தாக்கல் செய்ய செப்டம்பர் 15 அன்று அறிவிப்பு வெளியானது. அறிவிப்பின்படி நவம்பர் 8 அன்று மனுக்கள் பெறப்பட்டன. அன்று, சர்வதேசத் தலைவர் பதவிக்கு யதாத்ரி புவனகிரி சங்கத்திடமிருந்து மட்டும் ஒரு மனு தாக்கல் ஆனது.
- சர்வதேச நிர்வாக துணைத் தலைவர் பதவிக்கு வாசவி சங்கம் ஓங்கோலிலிருந்து ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. இரண்டு மனுக்களும் உரிய வகையில் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றின் அறிக்கைகள் INP ரவிச்சந்தரனுக்கு அனுப்பப்பட்டன.

அதிகாரப்பூர்வ அறிவிப்பு

இறுதியில், 2025ம் ஆண்டிற்காகன புதிய தலைவர்கள் பற்றிய அறிவிப்பு அங்கு கூடியிருந்த வாசவியன்களிடம் புதிய உற்சாகத்தை பரப்பியது.

- சர்வதேசத் தலைவர்-2025 ஆக வாசவியன் டயமண்ட் ஸ்டார் KCGF இருகுல்ல ராமகிருஷ்ணா அறிவிக்கப்பட்டது.
- சர்வதேச நிர்வாக துணைத் தலைவர்-2025 ஆக வாசவியன் சௌபாக்யா சேவா சங்கல்ப KCGF சித்த சூரிய பிரகாஷ் என்று அறிவிக்கப்பட்டது.

இவ்விரு தலைவர்களும் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள். இதன் அறிவிப்பு வெளியானதும் வாசவியன் தலைவர்களின் கரவொலி அரங்கு முழுதும் எதிரொலித்தது.

மகத்தான வருகை

- அறிவிப்பு வெளியானதும் இருகுல்ல ராமகிருஷ்ணாவை பெரிய அளவில் வரவேற்று மேடைக்கு அழைத்து வந்தார்கள். அப்போது அவர் பெயர் LED திரையில் ஒளிர்ந்தது. இவரைப் பற்றிய குறிப்புக்களை அறிந்து கொள்ள அரங்கில் கூடியிருந்த வாசவியன்கள் அதிக ஆர்வம் காட்டினார்கள்.

ICON 2024 The LEGEND

நான் சுகித்திருக்க மாட்டேன்... ஒவ்வொருவரையும் ஈடுபடுத்துவேன் இருகுல்ல ராமகிருஷ்ணாவின் ஏற்புரை

- ஒலி, ஒளி காட்சிகள் நிறைவு பெற்றதும், எண்ணற்ற வாசவியன்கள் இருகுல்ல ராமகிருஷ்ணாவின் முகத் தோற்றத்தை முகமூடியாக அணிந்து தோன்றினார்கள். பெண் வாசவியன்கள் பதுகம்மா பாடல் பாடினார்கள்.

பின்னணியில் வாசவாம்பா பாடல் ஒலிக்க, மிகுந்த உற்சாகத்துடன் இருகுல்ல ராமகிருஷ்ணா தனது மனைவியுடன் அரங்கிற்கு வந்தார். அப்போது பல வாசவியன்கள் புதிய INPயுடன் செல்பி எடுத்துக் கொள்ள முண்டியடித்து விரைந்தார்கள். அவரது வருகையை எண்ணற்ற வாசவியன்கள் செல் போனில் வீடியோ எடுத்தார்கள். இவ்வகையில் ராமகிருஷ்ணா 100 அடிகள் தொலைவிலுள்ள மேடைக்கு வந்து சேர 45 நிமிடங்கள் ஆயின. புதிய தலைவரைக் காணும் வாசவியன்களின் பெரு விருப்பத்தை இது வெளிப்படுத்தியது.

தெலுங்கில் பிரமாணம் ஏற்றார்

சர்வதேசத் தலைவர்-2024 R.ரவிச்சந்திரன் புதிய சர்வதேசத் தலைவர்-2025 இருகுல்ல ராமகிருஷ்ணாவிற்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். புதிய INP தெலுங்கில் பிரமாணம் செய்தார். தனது பதவி காலத்தில் VCI வளர்ச்சிக்கு பாடுபடுவேன் என்று உறுதியளித்தார்.

பதவியேற்பு முடிந்ததும் ரவிச்சந்திரன் ராமகிருஷ்ணாவிற்கு சால்வை அணிவித்து வரும் வருடம் வெற்றியாக அமைய வாழ்த்துக் கூறினார். பிறகு ராமகிருஷ்ணா VCI உயர் தலைவர்களிடம் ஆசிகள் பெற்றார். பெரும்பாலன INPகள் நிகழ்வில் பங்கு வகித்தார்கள்.

'கடதார' ராமகிருஷ்ணா

எல்லா வாசவி மாவட்டங்களிலிருந்து வருகை தந்த VCI உயர் தலைவர்கள் ராமகிருஷ்ணாவிற்கு உற்சாக வாழ்த்துக்களை வழங்கினர். அவரது சொந்த மாவட்டத் தலைவர்கள் அவருக்கு வெள்ளி கிரீடம் அணிவித்து வெள்ளி சூலாயுதம் வழங்கி அவருடன் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். அவரும் அதை புன்னகையுடன் ஏற்றார்.

* * *

இந்த மிகவுயர்ந்த பதவியை அனுபவிப்பதற்காக ஏற்கவில்லை: நான் இங்கு உண்மையாக உழைக்க விருப்பம் கொண்டு ஏற்றேன். நான் 2025 வருடம் முழுதும் 24x7 எனஓய்வின்றி அமைப்பிற்காக பாடுபடுவேன் என்று வாசவியன் டயமண்ட் ஸ்டார் KCGF இருகுல்ல ராமகிருஷ்ணா பதவியேற்பு விழாவில் விவரித்தார். டிச.15 அன்று ICON மேடையில் அவர் ஏற்புரை நிகழ்த்தினார். 2016லிருந்து மூன்று ஆண்டுகள் நான் IECயிலிருந்து விலக்கி வைக்கப்பட்டேன், அதனால் நான் ல் எந்தப் பதவியையும் வகிக்கவில்லை. பிறகு நான் சுவற்றில் அடித்த பந்து போல திரும்பி வந்தேன். வெள்ளை குர்தா அணிந்து 'ஜெய் போலே வாசவி மாதாகீ' என்று கோஷத்துடன் உரையைத் துவங்கினார். அவரது உரையிலிருந்து:

- புதிய சங்கங்கள் விரிவாகம் மற்றும் புதிய KCGFஉறுப்பினர்கள் பதிவு ஆகியவற்றின் முந்தைய சாதனைகளை நான் முறியடிப்பேன். நான் அனைத்து சாதனைகளையும் கடப்பேன் என்று கூறவில்லை ஆனால் என்னால் இயன்றவரையில் கடினமாக உழைத்து சிறந்த பணியாளன் என்று போற்றும் அளவில் நிச்சயமாக கடமையாற்றுவேன்.
- இவ்வருடத்தில் பல புதிய திட்டங்களை செயல்படுத்த திட்டம் தீட்டி உள்ளேன். ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒரு IEC அதிகாரியை

தலைவராக நியமிப்பேன். அவர்களது செயலாற்றல்கள், பணிகள் சிறப்பாக இருந்தால் MIDCONலிருந்து அவர்கள் உயர்வு பெறுவார்கள்.

- VCIன் செயலபாடுகள் அனைத்திலும் வெளிப்படைத் தன்மை இருக்கும். முன் அனுமதி பெற்று எவர் வந்தாலும் ஹைதராபாத் மத்திய அலுவலகத்தில் VCIன் கணக்குகளைக் கூட ஆராயலாம்.
- சஸ்பென்ஸ் கணக்குகளின் மீது ஆய்வு நடக்கின்றது. சரிபார்ப்பு நிறைவு பெற்றதும் அத்தொகைகள் சம்பந்தப்பட்ட கணக்குகளில் சேர்க்கப்படும். சரி பார்க்கப்பட்ட பிறகு எஞ்சியிருக்கும் தொகை சேவைப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும்.
- இவ்வருடத்தில் நாம் 365 புதிய சங்கங்களை துவக்கவுள்ளோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் 40 சங்கங்கள் இருக்க வேண்டும். ஏதேனும் ஒரு மாவட்டம் இந்த எண்ணிக்கையில் குறைந்தால் வேறு மாவட்டத்துடன் இணைக்கப்படும்.
- நல்லெண்ண விஜயத்தை எளிமைப்படுத்தியுள்ளோம். சிறிய சங்கங்களுக்குக் கூட விஜயம் செய்யும் வகையில் திட்டம் உள்ளது. இவ்வருடத்தில் குறைந்தது 500 சங்கங்களுக்கு விஜயம் செய்ய தீர்மானித்துள்ளேன். பிராந்தியத்தில் குறைவாக செயலாற்றும் சங்கங்களுக்கு முன்னுரிமையளிப்பேன்.
- சிரஞ்ஜீவி இரத்த வங்கியுடன் இணைந்து ரத்த தான முகாம்களை நடத்துவோம். இந்நிகழ்ச்சிக்கு முதன்மை விருந்தினராக மெகா ஸ்டாரை அழைத்து வருவோம்.
- இதற்கு முன்பு துடிப்பாக செயல்பட்ட பல வாசவியன்கள் சில காரணங்களினால் நமது இயக்கத்திலிருந்து விலகியிருக்கிறார்கள், அவர்களை சேவைக்கு மீண்டும் திரும்ப அழைத்து வரும் திட்டத்திற்கு 'கர் வாபஸி' என்று பெயரிட்டுள்ளேன்.

ICON 2024 The LEGEND

சர்வதேச நிர்வாக துணைத் தலைவர்-2025 சித்த சூரிய பிரகாச ராவ் பிரமாணம் ஏற்றார்

Vn. சௌபாக்ய சேவா சங்கல் சித்த சூரிய பிரகாச ராவ் சர்வதேச நிர்வாக துணைத் தலைவர் - 2025ஆக பதவியேற்றார். இவரது மனைவி ஜெயஸ்ரீ, மகள் சந்தனா ஆகியோர் உடனிருந்தார்கள். சர்வதேசத் தலைவர்-2024 R.ரவிச்சந்திரன் அவருக்கு சத்தியப் பிரமாணம் செய்து வைத்தார். வாசவி இயக்கத்தில் இருபத்தைந்து ஆண்டுகள் அனுபவம் மிக்க சித்த சூரிய பிரகாச ராவ் தெலுங்கு மொழியில் பிரமாணம் செய்தார்.

இதற்கு முன்பாக சித்த சூரிய பிரகாச ராவ் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பதை INP-2024 R.ரவிச்சந்திரன் அறிவித்தார். அப்போது அங்க கூடியிருந்த வாசவியன்கள் பெருத்த கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். இந்த அறிவிப்பு வெளியான உடனே V205A மாவட்டத் தலைவர்கள் பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் சித்த சூரிய பிரகாச ராவை அமர்த்தி மேடைக்கு அழைத்து வந்தார்கள். பின்னணியில் டிரம்ஸ் மற்றும் பல வாத்திய கருவிகள் இசைத்து அவரை வரவேற்றது. அப்போது LED திரையில் சித்த சூரிய பிரகாச ராவின் உருவம் ஒளிர்ந்தது. அத்துடன் அவர் எந்த நோக்கம், இலக்கைக் கொண்டு பதவிக்கு வந்தார் என்ற விளக்கவுரை ஒலித்தது. 'சமுதாயம் நமக்கு அதிகமாக கொடுத்துள்ளது, நாம் பிரதியாக அதிகம் திருப்பிச் செலுத்துவோம்' என்று ஒலித்தது. அவரது நோக்கத்தை அறிந்த வாசவியன்கள் தங்களது மகிழ்ச்சியை கரவொலியால் காட்டினார்கள்.

சர்வதேச தலைமை குழு பதவியேற்றது

சர்வதேசத் தலைவர்-2025 தனக்கான உறுப்பினர்களை நியமனம் செய்தார். VCI உப-விதிகளின்படி சித்த சூரிய பிரகாச ராவ் சர்வதேச நிர்வாக துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். சர்வதேச செயலாளர் மற்றும் சர்வதேச பொருளாளர் பதவிக்கு உரியவர்களை இருகுல்ல ராமகிருஷ்ணா நியமித்தார். 2025 சர்வதேச தலைமை குழுவில் பெரிய மாற்றும் ஒன்று நிகழ்ந்தது.

2025லிருந்து சர்வதேச செயலாளர் பதவி இரண்டாகப் பிரிக்கப்பட்டது. நிர்வாகம் மற்றும் சேவைகள் VCIன் இரண்டு கண்கள் என்பதால் சர்வதேச செயலாளர்-நிர்வாகம், சர்தேச செயலாளர்-சேவைப் பணிகள் என்று இந்த வருடத்தில் மாற்றம் பெற்றது. V101A மாவட்டத்தை சேர்ந்த 2025ம் வருட IEC அதிகாரி கர்லபடி ஸ்ரீனிவாசுலு சர்வதேச செயலாளர்-நிர்வாகம் என பொறுப்பேற்றார். V215A மாவட்டத்தை சேர்ந்த IEC அதிகாரி போத சூரியபிரகாச ராவ் சர்வதேச செயலாளர் - சேவைப் பணிகள் என பொறுப்பேற்றார். V502A மாவட்டத்தை சேர்ந்த IEC அதிகாரி சுஜாதா ரமேஷ் பாபு சர்வதேச பொருளாளராக நியமிக்கப்பட்டார். இருகுல்ல ராமகிருஷ்ணா இவர்கள் அனைவருக்கும் சத்தியப் பிரமாணம் செய்து வைத்து பொறுப்புகளை ஒப்படைத்தார்.

KCGF
புதிய
சங்கங்கள்

ICON 2024 The LEGEND

ஒன்பது ஆளுநர்களுக்கு சூப்பர் பெஸ்ட் விருதுகள்

KCGF கொடைகள் திரட்டுவது மற்றும் புதிய சங்கங்கள் விரிவாக்கம் செய்வது போன்ற செயல்களில் தங்களது தனித்திறமை காட்டிஅற்புதமாக செயல்பட்ட ஒன்பது ஆளுநர்களுக்கு ICON மேடையில் விருதுகள் வழங்கப்பட்டன. அவர்களது ஒப்பற்ற சேவைகளை INP ரவிச்சந்திரன் பாராட்டினார்.

KCGF கொடைகள் : சூப்பர் பெஸ்ட் ஆளுநர்கள்

Vn.Kotta Ganesh Babu, V203A

Vn. Allagadda Veve Gupta, V201A

Vn.Oleti Rashmi, V502A

புதிய சங்கங்கள்

Vn. Bhanuri Narasimhulu, V105A

Vn.Surisetti Narasimha Gutpta, V102A

Vn. Racharla Kamalakar, V104A

Vn. GVS Subhash, V210A

Vn.Yelamarthi Narasinga Rao, V216A

Vn.Jandhyam Madhavi, V107A
(For NRI clubs expansion)

மேற்குறிப்பிட்ட விருதுகளுடன் மேலும் சில விருதுகள் வழங்கப்பட்டன. பெஸ்ட் இன்னோவேட்டிவ் சூப்பர் பெஸ்ட் ஆளுநர் விருதுகள்–3: வைப்ரன்ட் சூப்பர் பெஸ்ட் விருதுகள்–6: பார்ன் டு வின் பெஸ்ட் ஆளுநர் விருதுகள்–13

ICON 2024 The LEGEND

NRI சங்கங்களுக்காகவே தனி மாவட்டம்–V601A

வாசவி சேவை இயக்கத்தில் மேலும் ஒரு மாவட்டம் உதயமானது. NRI சங்கங்கள் அனைத்தையும் இணைத்து V601A எனும் புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. V601A மாவட்டத்தின் சார்டர் தலைவராக துபாயில் வசிக்கும் நூகுல முரளி கிருஷ்ணாவை சர்வதேசத் தலைவர் இருகுல்ல ராமகிருஷ்ணா நியமித்துள்ளார். முரளி கிருஷ்ணா வாசவி சங்கம் துபாயின் தலைவர் பொறுப்பில் தற்போது சேவைகளை செய்து வருகின்றார். 2025ம் ஆண்டில் அயல் நாடுகளில் VCIன் கிளைகளை விரிவாக்கம் செய்வதில் இவர் கவனம் செலுத்துகின்றார்.

- தற்போது VCIன் பிணைப்பில் 18 NRI சங்கங்கள் உள்ளன. புதிய NRI சங்கத்திற்கு சேவைகள் செய்ய ரூ.20,000/ நிதி வழங்கப்படும் என்று நிகழ்வில் இருகுல்ல ராமகிருஷ்ணா அறிவித்தார்.
- புதிய V601A மாவட்டத்தின் ஆளுநராக கடப்பா மாவட்டம், ஜம்மலமடுகுவைச் சேர்ந்த முரளி கிருஷ்ணா நியமிக்கப்பட்டு உள்ளார். இவர் துபாய்க்கு சென்று அரசுப் பணியில் சேர்ந்து அங்கேயே வசிக்கிறார்.

- 2025ல், இருகுல்ல ராமகிருஷ்ணா தலைமையின் கீழ் ஆரிய வைஸ்ய சமூகத்திற்கு சேவை செய்ய இவர் திடமாக தீர்மானித்துள்ளார். இப்போது புதிதாக உதயமான V601Aமாவட்ட ஆளுநராக பொறுப்பேற்றுள்ளார்.
- ஷார்ஜா, ஓமன், அபுதாபி மற்றும் கெய்ரோ நகரங்களில் VCI கிளைகளை விரிவாக்கம் செய்ய விரும்புகிறார். மார்ச் 31க்குள் புதிய கிளைகளை திறக்க உறுதியேற்றுள்ளார்.
- இப்பிராந்தியங்களிலுள்ள தெலுங்கு மக்களை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து வாசவி ஜெயந்தி, கார்திகா சமாராதனா நிகழ்ச்சிகளை நடத்துவேன் என உறுதி தெரிவித்துள்ளார்.
- 2025ம் வருடத்தில் சர்வதேச இயக்குநர் – பல்துறை ஜெயந்தம் மாதவி NRI சங்கங்கள் விரிவாக்கத்திற்கு தலைமை வகிப்பார் என்று சர்வதேசத் தலைவர் இருகுல்ல ராமகிருஷ்ணா அறிவித்துள்ளார். இவர் 2024ம் ஆண்டில் அதிக எண்ணிக்கையில் NRI சங்கங்களை உருவாக்கியதற்காக பாராட்டி உள்ளார்.

VCIல் உறுப்பினராவது எளிமையாக்கப்பட்டுள்ளது ‘வாசவி சங்கம் யுனிவர்சல் துவங்கப்பட்டது’

சர்வதேசத் தலைவர் இருகுல்ல ராமகிருஷண்ணா இவ்வருடத்தில் 50000 புதிய உறுப்பினர்களை சேர்க்க இலக்கு நிர்ணயித்து உள்ளார். இதற்கான செயல் திட்டத்தை இந்த ஆண்டில் பின்பற்ற கேட்டுக் கொண்டுள்ளார்.

- உப–விதிகளின்படி இ–சங்கங்கள் மூலமாக உலகெங்கும் புதிய உறுப்பினர்களை சேர்ப்பது மிகவும் சாத்தியமானது. நகரங்கள், ஊரகங்களில் உறுப்பினர்களை புதிதாக சேர்க்கும் விதிகள் தளர்க்கப்பட்டு எளிமையாக்கப்பட்டுள்ளது என்றும் தெரியப்படுத்துகின்றார்.
- உலகின் எப்பகுதியிலிருந்து புதிய உறுப்பினர்களை VCIல் சேர்க்க ஒரு புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த நோக்கில் ‘வாசவி சங்கம் யுனிவர்சல்’ என்ற பெயரில் ஒரு புதிய சங்கம் தோன்றியுள்ளது. உலகில் எங்கு வசிக்கும் ஆரிய வைஸ்யர்கள் இந்த சங்கத்தில் உறுப்பினராக முடியும்.
- ஒரு பிராந்தியத்தில் வசிக்கும் வாசவியன் அந்த பிராந்திய சங்கத்தில் மட்டுமே சேர முடியும் என்று விதி உள்ளது. இந்த கட்டுப்பாட்டினால் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை எதிர்பார்த்த அளவில் இல்லை. இந்த விதியை தளர்த்துவதன் வாயிலாக உறுப்பினர்கள் எண்ணிக்கை கணிசமாக உயரும் என்று INP இருகுல்ல ராமகிருஷ்ணா எதிர்பார்க்கிறார்.
- இப்போது பல புதிய தொழில் நுட்பங்கள் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தி மெய் நிகர் செயலிகள் வழியாக யுனிவர்சல் சங்கத்தில் புதிய உறுப்பினர்கள் எளிதாக இணைய முடியும். இவ்வகையில் நமது வாசவியன்களிடையில் தோழமை பெருகும் என்று INP இருகுல்ல நம்புகின்றார்.
- வாசவியன்கள் விரும்பும் பல இடங்களில் நாட்காட்டி நிகழ்ச்சிகள் மற்றும் இவ்வருடத் திட்டங்கள் சிறப்பாக ஏற்பாடு செய்யப்படும் என்று INP இருகுல்ல ராமகிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

பல திட்டங்கள் வெளியானது

ICON 2024 The LEGEND

புது வருடத்திற்கான கரு மற்றும் திட்டங்களை சர்வதேசத்தலைவர் - 2025 இருகுல்ல ராமகிருஷ்ணா வெளியிட்டார். கரு மற்றும் திட்டம் சார்ந்த லோகோக்களையும், 2025-செயல் திட்டத்தையும், பிரதான சேவைப் பணிகளையும் உயர் தலைவர்கள் வெளியிட்டார்கள்.

- 2025ம் ஆண்டிற்கான கரு மற்றும் திட்டம் குறித்த டிஜிட்டல் லோகோக்களை முன்னாள் INP யதா நாகேஷ்வர் ராவ் நிகழ்வில் வெளியிட்டார்.
- மனித நேயம் – சமூகம் எனும் 2025ம் ஆண்டிற்கான கரு மற்றும் திட்டத்தை மற்றொரு முன்னாள் INP அகிர் வெங்கடேஷ் நிகழ்வில் வெளியிட்டார்.
- முன்னாள் INP AVSN குப்தா, 2025ம் ஆண்டிற்கான டயரியை வெளியிட்டார்.
- ஆண்டு செயல்திட்டம்–2025ஐ, ன் முதல் பெண், இருகுல்ல ராமகிருஷ்ணாவின் மனைவி இருகுல்ல மமதா வெளியிட்டார்.
- 2025ம் ஆண்டில் VCIன் புகழை உயர்த்துவதற்கான திட்டங்களின் விவரங்களை தெலுங்கானா ஆரிய வைஸ்ய மகாசபை தலைவர் அமராவதி லக்ஷ்மிநாராயணா வெளியிட்டார்.

பணிகள் பற்றி விவரங்கள் வெளியானது

பல நிலைகளில் எட்ட வேண்டிய இலக்குகளை சர்வதேசத் தலைவர் இருகுல்ல ராமகிருஷ்ணா நிர்ணயித்துள்ளார். இதன் வகையில் ஆற்றவுள்ள பணி விவரங்களை தலைமை குழு உறுப்பினர்கள் வெளியிட்டார்கள்.

- IEC அதிகாரிகளுக்கான பணி இலக்குகளை சர்வதேச நிர்வாக துணைத் தலைவர் சித்த சூரிய பிரகாச ராவ் வெளியிட்டார்.
- ஆளுநர்களுக்கான பணி இலக்குகளை சர்வதேச செயலாளர்–நிர்வாகம் கர்லபடி ஸ்ரீனிவாசலு வெளியிட்டார்.
- பிராந்தியத் தலைவர்களுக்கான பணி இலக்குகளை சர்வதேச செயலாளர்– சேவைகள் போத சாய் சூரிய பிரகாச ராவ் வெளியிட்டார்.
- மண்டலத் தலைவர்களுக்கான பணி இலக்குகளை சர்வதேச பொருளாளர் சுஜாதா ரமேஷ் பாபு வெளியிட்டார்.

சர்வதேசத் தலைவராக பதவியேற்ற ஒரே தினத்தில் அனைத்து நிலை தலைவர்களுக்கும் இவ்வாண்டிற்கான பணிகளையும் இலக்குகளையும் அவர் அறிவித்தது வாசவியன்களை வியக்க வைத்துள்ளது. இந்நிகழ்வில் வாசவியன்களுடன் உயர் தலைவர்கள் பலரும் சர்வதேசத் தலைவர் இருகுல்ல ராமகிருஷ்ணாவின் செயலாற்றும் திறமையை பாராட்டியுள்ளார்கள்.

வணிக பிரபலங்களுக்கு வாழ்நாள் சாதனை விருதுகள்

அடித்தட்டிலிருந்து கடின உழைப்பால் உயர்ந்த நிலையை எட்டிய வணிக பிரபலங்களுக்கு ICON மேடையில் வாழ்நாள் சாதனை விருதுகளை வழங்கி மீண்டும் தனது தனித்துவமான இயல்பை நிலைநாட்டியுள்ளார் INP-2024 ரவிச்சந்திரன்.

- **ஸ்ரீ K.R.நாகராஜன்:** தென்னிந்தியாவின் பாரம்பரிய உடைகளுக்கு புகழ் சேர்த்த ராமராஜ் காட்டன்: ஸ்ரீ K.R.நாகராஜனுக்கு வாழ்நாள் சாதனை விருது வழங்கப்பட்டது. நான் தமிழகத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் பஞ்சகச்சம் பாணியை தெலுங்கு மக்களிடமிருந்து கற்றுக் கொண்டேன். எனக்கு 60% வாடிக்கையாளர்கள் வாசவியன்களே. இவ்விருது நெசவாளர்களுக்கு கிடைத்ததாகவே நான் உணர்கிறேன் என்று நாகராஜன் உரையாற்றினார்.
- **ஸ்ரீ SPS செல்வராஜ் விஜயராஜா: கோபால் பற்பொடி:** சர்வதேச, தேசிய நிறுவனங்களின் கடுமையான போட்டிகளுக்கிடையில் கடந்த 100 ஆண்டு மக்களிடம் பிரபலம் குறையாமல் விளங்குவது கோபால் பற்பொடி. கோபால் குழுமங்களின் அதிபர் SPS செல்வராஜ். இக்குழுமங்களின் சார்பாக மூன்றாவது தலைமுறையினரான செல்வராஜ் விஜயராஜா வாழ்நாள் சாதனை விருதைப் பெற்றுக் கொண்டார். இன்றளவிலும் தென்னிந்தியாவில் பற்பொடிக்கான தேவை பெருகி வருகின்றது. இந்த நிறுவனம் பற்பசையைத் தயாரிக்கவும் திட்டமிட்டு வருகின்றது.
- **Dr. ஸ்ரீகாந்த் மெல்லேவார், ஹோம்கேர் இன்டர்நேஷனல்:** ஆந்திரா தெலுங்கானா, கேரளா மற்றும் தமிழ்நாட்டில் 85 மருத்துவமனைகளை நடத்திவரும் ஹோம்கேர் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் CMD ஸ்ரீகாந்த் மெல்லேவார். இவருக்கு வாழ்நாள் சாதனை விருதை INP ரவிச்சந்திரன் வழங்கினார். தென்னிந்தியாவில் தமிழகத்தில் 2011ல் காலடி எடுத்து வைத்தோம், தற்போது சென்னையில் மட்டும் பத்து கிளைகள் இயங்குகிறது: எனக்கு ரவிச்சந்திரன் போன்ற ஒரு சகோதரன் கிடைத்தது மகிழ்ச்சியைத் தருகின்றது என்று உரையாற்றிய Dr. ஸ்ரீகாந்த் மெல்லேவார்,தெரிவித்தார்.

ஸ்ரீ அரவிந்த், J.நடராஜன், A.D.பத்மசிங், M.V. முத்து ராமலிங்கம், ஸ்ரீராம், விஸ்வநாதம், அனிர்த் காந்தி ஆகியோருக்கும் மேடையில் வாழ்நாள் சாதனை விருதுகளை சர்வதேசத்தலைவர் ரவிச்சந்திரன் வழங்கி கௌரவித்தார்.

3000 விருதுகள் வழங்கப்பட்டன

INP-2024 ரவிச்சந்திரன் மாநாட்டை வெகு சிறப்பா நடத்தி தனது தனித் திறமையை வெளிப்படுத்தியது மட்டுமின்றி நிகழ்வில் பல நிலை தலைவர்களுக்கு 3000 விருதுகளை வழங்கி கௌரவித்தும் இருக்கிறார். 2024ம் ஆண்டில் சிறப்பாக பணியாற்றிய அனைத்து வாசவியன்களும் மாநாட்டில் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். முன்னாள் சர்வதேசத் தலைவர் வங்கதர வாசுதேவ ராவ் அவார்ட்ஸ் கமிட்டியின் தலைவராக இருக்கின்றார்.

ஐந்து மொழிகளில் VIPPRO வெளியானது

புதிய சர்வதேசத் தலைவராக இருகுல்ல ராமகிருஷ்ணா பதவியேற்ற தினத்திலேயே VIPPRO கையேட்டை ஐந்து மொழிகளில் பதிப்பித்து வெளியிட்டு வெற்றி கண்டுள்ளார். இதற்கு முன்பாக VIPPRO கையேடு தெலுங்கு, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் மட்டுமே வெளியிடப்பட்டு வந்தது. ஆனால் இம்முறை கன்னடனம், ஹிந்தியையும் சேர்த்து இதழ் ஆசிரியர் S.V. சுரேஷ் மேற்பார்வையில் ஐந்து மொழிகளில் VIPPRO வெளியானது.

தெலுங்கு பதிப்பை Dr. வேமுல ஹ ஜ ராத்தைய்ய குப்தா வெளியிட்டார்.

ஆங்கில பதிப்பை கெம்பா நாகேஷ்வர் ராவ் வெளியிட்டார்.

தமிழ் பதிப்பை சௌபாக்யா V. ஆதிகேசவன் வெளியிட்டார்.

ஹிந்தி பதிப்பை AVSN குப்தா வெளியிட்டார்.

மகாராஷ்டிரா உட்பட ஆறு மாநிலங்களில் வாசவி சங்கங்கள் கிளை பரப்பியுள்ளது. இதர ஹிந்தி மாநில வாசவியன்களின் நலனைக் கருத்திலிருத்தி ஹிந்தியிலும் பதிப்பு வெளியிடப் பட்டுள்ளது. இதனால் VCIன் கிளைகள் வட இந்தியாவிலும் பரவ வாய்ப்புள்ளது. VIPPRO ஐம்மொழியில் பதிப்பித்த ராமகிருஷ்ணாவை உயர் தலைவர்கள் பாராட்டினார்கள்.

ICON 2024 The LEGEND

இதே சமயத்தில், 2025ம் ஆண்டிற்கான VCI டயரியை முதல் முறையாக சர்வதேசத் தலைவர் இருகுல்ல ராமகிருஷ்ணா வெளியிட்டு உள்ளார். இந்தப் பதிப்பினை முன்னாள் சர்வதேசத் தலைவர் அகிர் வெங்கடேஷ் நிகழ்வில் வெளியிட்டார்.

ICON தீ லெஜெண்ட்-2024 சிறப்பு பதிப்பு வெளியானது

'தி லெஜெண்ட்-2024, ICON' என்கிற சிறப்பு பதிப்பை சர்வதேசத் தலைவர்-2024 ரவிச்சந்திரன் வாசவியன்களின் பலத்த கரவொலிக்கிடையில் வெளியிட்டார். 2024ம் ஆண்டில் ரவிச்சந்திரன் பெற்ற வெற்றிச் சாதனைகள் 48 பக்கங்கள் கொண்ட பதிப்பில் இடம் பெற்றுள்ளன.

- IT துறையிடமிருந்து 12A மற்றும் 80G சான்றிதழ் மூலமாக வரி விலக்கம் கிடைத்தது நிர்வாக ரீதியான சாதனையாக இடம் பெறுகின்றது.
- ஒரு கோடி விதைப் பந்துகளை தயாரித்து நடவு செய்ததும் மெகா இரத்த தான முகாம்களை நடத்தி 5000 யூனிட்கள் இரத்தம் சேகரித்ததும் சேவைப் பணிகளின் சாதனைகளாக இப்புத்தகத்தில் இடம் பெறுகின்றது.

2024ம் ஆண்டில் ரவிச்சந்திரனின் நிர்வாகத் திறமை எவ்வாறு இருந்தது என்கிற முன்னாள் INPகளின் பாராட்டுக்களும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாசவி நியூஸ் இதழின் ஆசிரியர் திரு S.V. சுரேஷ் மற்றும் அவரது குழுவினர் சிறப்பு பதிப்பை செம்மையாக அனைவரையும் கவரும் வகையில் பதிப்பித்ததற்கு INP-2024 பாராட்டுக்களைத் தெரிவித்து வாழ்த்தினார்.

ICON கமிட்டிக்கு பாராட்டுக்கள்

ICON 2024 The LEGEND

வெகு தொலைவிலிருந்து மாநாட்டிற்கு வருகை தரும் வாசவியன்களுக்கு எவ்வகையிலும் குறையில்லாமல் அனைத்து வசதிகளையும் ICON தலைவர், IEC அதிகாரி Vn.சுரேஷ் தலைமையில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. முன்னாள் INP சௌபாக்யா V.ஆதிகேசவன் இக்கமிட்டியின் கௌரவத் தலைவராக பொறுப்பு வகித்தார்.

வருடம் முழுதும் தகிக்கும் வெயிலால் கனலும் புண்ணிய யாத்ரீக தலம் மதுரை. சுற்றியிருக்கும் மாழலங்களிலிருந்து ஆயிரக் கணக்கான வாசவியன்கள் இங்கு வந்த சமயத்தில் இறைவனின்அருளால் மழை ஓய்ந்து இதமான குளிர் நிலவிது. இவ்வருடம் முழுதும் ரவிச்சந்திரன் கடுமையாக உழைத்தார் என்று நிகழ்வில் உரையாற்றிய சௌபாக்யா V.ஆதிகேசவன் குறிப்பிட்டார்.

மாநாட்டை வெற்றிகரமாக நிறைவு செய்ய உதவிய அனைவருக்கும் ICON கமிட்டி தலைவர் சுரேஷ் நன்றி பாராட்டினார்.

இரண்டு நாள் மாநாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தையும் சகோதரர் ரவிச்சந்திரன் சிறப்பாக திட்டமிட்டிருந்ததாக IEC அதிகாரி லக்ஷ்மி பாலாஜி பாராட்டினார். வருகையாளர்கள் தங்குவதற்கு அறைகள்,

இதர ஏற்பாடுகளை இரு நாட்களிலும் இவரே கவனித்தார்.

ICON செயலாளர் சுஜாதா ரமேஷ் பாபு, பொருளாளர் R.சதீஷ்குமார், ஒருங்கிணைப்பாளர் மற்றும் ரவிச்சந்திரனின் மகன் ராம் விக்னேஷ் ஆகியோரை நிகழ்வில் INP ரவிச்சந்திரன் சிறப்பாக செயலாற்றியதற்கு பாராட்டினார்.

ICONக்கு கொடை கொடுத்து உதவியவர்களுக்கு பாராட்டுக்கள்

ICON நிகழ்ச்சிக்கு ஆதரவளித்த பத்து புரவலர்கள் கொடை வழங்கி உதவினார்கள். அவர்களுக்காக சிறப்பு மேடை அமைக்கப்பட்டிருந்தது. சர்வதேசத் தலைவர்-2024 R.ரவிச்சந்திரன் இவர்களுக்கு தனது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

1. Vn. சேவாசங்கல்ப KCGF A.அரவிந்தன்
2. Vn. 2* KCGF ரேவதி
3. Vn. வித்யாசங்கல்ப KCGF போத சூரிய பிரகாஷ்
4. Vn. 2* KCGF போத ஆனந்த சாரதா
5. Vn. வைபவம் சேவாசிரோமணி, குண்ட பிரகாச ராவ்
6. Vn. வித்யாசங்கல்ப குண்ட ஹைமாவதி
7. Vn. சேவாசங்கல்ப B.N.குமாரவேல்
8. Vn. சேவாசங்கல்ப B.சித்ரா
9. Vn. வித்யாசங்கல்ப V.S.செந்தில்குமார்
10. Vn. ஷர்மிளா S.குமார்

இவர்களின் பங்களிப்பிற்காக INP-2024 R.ரவிச்சந்திரன் தனது மேடையில் பாராட்டி வாழ்த்தினார்.

ஆரிய வைஸ்ய மகாசபை செயலாளராக K.C.குப்தாவின் சேவைகள் மாபெரிது

VCIயும் ஆரிய வைஸ்ய மகாசபையும் வேறுவேறல்ல. இவ்விரு அமைப்புகளும் செயலாற்றும் சேவைகள் நெருக்கமாக இருக்கின்றன என்று தெலுங்கானா ஆரிய வைஸ்ய மகாசபை தலைவர் அமராவதி லக்ஷ்மிநாராயணா கூறினார். ஆக.15 அன்று மதுரையில் நடைபெற்ற ICONல் இவர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

என்னுடன் பல காலமாக ஆரிய வைஸ்ய யுவஜன சங்கத் தலைவராக பணி செய்த இருகுல்ல ராமகிருஷ்ணா தற்போது யாக தேர்வு பெற்றுள்ளது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. வாசவி சங்கங்களின் நிறுவனர் KC குப்தா, ஆரிய வைஸ்ய மகாசபையின் பொது செயலாளராக வெகு காலம் நீடித்திருந்தார். எனவே இவ்விரு அமைப்புகளும் வேறு வேறானவை அல்ல என்றார்.

2025ம் ஆண்டில் நிறைவேற்றுவதற்காக இருகுல்ல ராமகிருஷ்ணா பல திட்டங்களை அறிவித்திருந்தார். அவரது செயல் திட்டங்களின்படி அனைத்து வாசவியன்களும் இயங்க வேண்டும் என்பது என் விருப்பம். ராமகிருஷ்ணா 2025ல் ஒவ்வொரு நாளிலும் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு VCIன் புகழை மேலும் சிகரம் தொடச் செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

புஷ்பா கருத்தாக்கத்தில் பரிசு வென்ற பதாகைகள்

இரண்டு நாட்களிலும் பல மாவட்டங்கள் வழங்கிய வண்ணமிகு பதாகை காட்சியளிப்பு வாசவியன்களை வெகுவாகக் கவர்ந்தது. ICONல் நடத்தப்படும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக பல மாவட்டங்களை பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. ஆளுநர்களின் தலைமையில் வாசவியன்கள் காட்சியளிப்பில் பதாகைகளை ஏந்தி வந்து சர்வதேசத் தலைவரிடம் ஒப்படைப்பார்கள்.

வித்தியாசமான கருத்தாக்கங்கள்

ICONல் பல்லாயிரக்கணக்கான வாசவியன்களின் முன்னிலையில் அனைவரையும் கவரும் வகையில் வேறு வேறு கருத்துக்களை வெளிப்படுத்தும் பதாகைகள் இடம் பெற்றன. இது சர்வதேச வாசவி சங்கங்களின் மரபாக கடைபிடிக்கப்படுகின்றது. காலப் போக்கில் சர்வதேசத் தலைவர்கள் முதல், இரண்டு, மூன்று நிலைகளுக்கு பரிசுகளை அறிவித்தார்கள். இதுவே இந்நிகழ்ச்சியில் வாசவியன்கள் அதிக ஆர்வம் காட்டுவதற்கு காரணமாக அமைந்தது. மாவட்டங்களுக்கு இடையில் போட்டி போடும் ஆர்வம் ஓங்கியது. ஆளுநரின் தலைமையில் வாசவியன்கள் புதிய சிந்தனைகளை வெளிப்படுத்தும் நோக்கத்தில் பதாகைகளை தயாரித்து காட்சிப்படுத்தி வருகிறார்கள்.

மதுரை ICONனில் வெற்றி பெற்றவர்கள்

மதுரையில் நடைபெற்ற ICON மாநாட்டில் டிசம்பர் 14, 15 ஆகிய இரண்டு தினங்களிலும் பதாகை காட்சியளிப்பு அங்கம் வகித்தது. சிறந்த பதாகையை தேர்ந்தெடுக்க INP ரவிச்சந்திரன் VCI உயர் தலைவர்க மூவர் அடங்கிய ஒரு குழுவை நியமித்திருந்தார்.

1. முன்னாள் சர்வதேசத் தலைவர் மூஸ்தியால சங்கர்
2. முன்னாள் சர்வதேசத் தலைவர் யதா நாகேஷ்வர் ராவ்
3. முன்னாள் சர்வதேச நிர்வாக துணைத் தலைவர் சித்த சூரிய பிரகாச ராவ்.

இக்கமிட்டி முதல் மூன்று நிலைகளை பரிசிற்கு தேர்வு செய்தது. இவ்வருடம் மூன்றாம் பரிசிற்கு இரண்டு மாவட்டங்கள் தேர்ச்சி பெற்றிருந்தன.

முதல் பரிசு V213A மாவட்டத்திற்கு: புஷ்பா–2 திரைப்படத்தின் கருத்து அடிப்படையில் பதாகையை காட்சிப்படுத்தி கமிட்டியிடமிருந்து முதல் பரிசை தட்டிச் சென்றது. மாவட்ட ஆளுநர் கஞ்சர்ல ராம்மோகன் ராவ் இந்த பதாகை காட்சியளிப்பிற்கு தலைமை வகித்தார்,

மூன்றாம் பரிசு V215A மாவட்டத்திற்கு: சூரியன், சந்திரனை இரண்டு கண்களாகக் காட்டி அயோத்ய ராமரை காட்சிப்படுத்தி, 'V' லோகோவை மலர் பல்லக்கில் சுமந்து வந்த மூன்றாம் பரிசு பெற்றது. ஆளுநர் கல்லசூரி பிரவீண்குமார் இதற்கு தலைமை வகித்தார்

இரண்டாம் பரிசு V211A மாவட்டத்திற்கு: 'அஷ்டலக்ஷ்முலு' என்கிற கருத்து அடிப்படையில் லக்ஷ்மி தேவிசகிதம் வெங்கடேஷ பொருமாளையும் காட்சிப்படுத்தியுடன் பஜனை பாடி வந்து இரண்டாம் பரிசினை வென்றது.

மூன்றாம் பரிசு V107A மாவட்டத்திற்கு: தெலுங்கானா மரபினைப் பின்பற்றி 'போனம்' மற்றும் 'பொட்டுராஜு' கருத்து அடிப்படையில் காட்சிப்படுத்தி கூடுதல் மூன்றாம் பரிசை வென்றது. மாவ. V107A ன் IEC அதிகாரி ரேணிகுண்டல ஸ்ரீனிவாஸ் பொட்டுராஜுவாக வேடம் தரித்து வந்தார். ஆளுநர் ஜெயந்தம் மாதவி தலைமையில் இம்மாவட்ட வாசவியன்கள் மூன்றாம் பரிசினைப் பெற்றார்கள்.

2025ம் ஆண்டின் புதிய மாவட்ட ஆளுநர்களை சந்திப்போம்

Vn. கோல்டன் * KCGF துனுகுண்டல ஸ்ரீதர்

V212A மாவட்ட DISCON விஜயவாடாவிற்கு அருகில் குண்டுபள்ளியில் நவம்பரில் நடந்தது. நிகழ்வில் புதிய ஆளுநராக கோல்டன்*KCGF துனுகுண்டல ஸ்ரீதர் பதவியேற்றார். 2024ன் ஆளுநர் KLV சதீஷ் இவருக்கு பதவி பிரமாணம் செய்துவித்தார்.

V213A

Vn. 5 * KCGF உட்டுகூரி கிரண்குமார்

V213A மாவட்ட ஜங்கிரெட்டிரெட்டிகூடத்தில் நவ. 17 அன்று நடந்தது. நிகழ்வில் புதிய ஆளுநராக 5*KCGF உட்டுகூரி கிரண்குமார் பதவியேற்றார். 2024ன் ஆளுநர் கஞ்சர்ல ராம்மோகன் ராவ் இவருக்கு பதவி பிரமாணம் செய்துவித்தார்.

V215A

Vn. கோல்டன் * KCGF யெந்தூரி ராகவ குமாரி

V215A மாவட்ட DISCON ராஜமுந்திரியில் நடந்தது. நிகழ்வில் புதிய ஆளுநராக கோல்டன் *KCGF யெந்தூரி ராகவ குமாரி பதவியேற்றார். 2024ன் ஆளுநர் கல்லகூரி பிரவீண்குமார் இவருக்கு பதவி பிரமாணம் செய்துவித்தார்.

Vn. கோல்டன் * KCGF கொல்லூரு பார்வதி

V216A மாவட்ட DISCON அனகாபள்ளியில் நவ.10 அன்று நடந்தது. நிகழ்வில் புதிய ஆளுநராக கோல்டன் *KCGF கொல்லூரி பார்வதி பதவியேற்றார். 2024ன் ஆளுநர் Y.நரசிங்க ராவ் இவருக்கு பதவி பிரமாணம் செய்துவித்தார்.

V302A

Vn. கோல்டன் * KCGF யெந்தூரி ராகவ குமாரி

V302A மாவட்ட DISCON பெங்களூரு மல்லேஸ்வரத்தில் நவ. 2 அன்று நடந்தது. நிகழ்வில் புதிய ஆளுநராக கோல்டன் *KCGF அஸ்வத்த நாராயண மூர்த்தி பதவியேற்றார். 2024ன் ஆளுநர் பிரபாவதி பிரகாஷ் இவருக்கு பதவி பிரமாணம் செய்துவித்தார்.

V401A

Vn. சுனிதா சதீஷ் வட்டம்வார்

V401A மாவட்ட DISCON நவ. 1 அன்று நன்டெட்டில் நடந்தது. நிகழ்வில் புதிய ஆளுநராக வாசவியன் சுனிதா வட்டம்வார் பதவியேற்றார். 2024ன் ஆளுநர் ராகுல் சக்ரவார் இவருக்கு பதவி பிரமாணம் செய்துவித்தார்.

V503A

Vn. KCGF முரளி குப்தா

V503A மாவட்ட DISCON தமிழ்நாடு, ஆத்தூரில் நவ. 10 அன்று நடந்தது. நிகழ்வில் புதிய ஆளுநராக KCGF முரளி குப்தா பதவியேற்றார். 2024ன் ஆளுநர் ஆதிசேஷன் இவருக்கு பதவி பிரமாணம் செய்துவித்தார்.

IPROவாக பொறுப்பேற்றார்

2024ம் வருடத்தில் சர்வதேச பொதுஜன தொடர்பு அதிகாரி பதவி அறிமுகமானது. IEC அதிகாரி சில்வர் ஸ்டார் கோத்தகிரி ராமகிருஷ்ணா பிரமாணம் ஏற்று 2025ன் IPROவாக பொறுப்பேற்றார். INP ராமகிருஷ்ணா இவருக்கு பிரமாணம் செய்து வைத்து பதவிப் பொறுப்பை ஒப்படைத்தார்.

சர்வதேச வாசவி சங்கங்கள்

Live to Serve

2025ற்கான கரு
மனிதநேயம்

2025ற்கான திட்டம்
சமூகம்

VCI-VICTORY

இமேஜ் பில்டிங் ஆக்டிவிடீஸ் (IBA)

VCIன் புகழை ஓங்கச் செய்யும் நோக்கத்தில் நமது முயற்சிகள் குறிப்பிட்ட துறைகளில் ஒவ்வொரு இரண்டு மாதங்களிலும் சாதனைகளைப் படைப்போம். விக்டரி என்கிற தலைப்பின் கீழ் ஏழு துறைகளில் இமேஜ் பில்டிங் செயல்பாடுகள் தொடரும்.

- **ஒவ்வொரு நாளிலும் ஒரு மரக்கன்று–100 நாட்கள்:** வாசவியன்கள் நூறு நாட்களில், தினமும் ஒரு மரக் கன்றை பதியம் செய்ய வேண்டும். இது நிச்சயம் ஒரு சாதனையாக உருவெடுக்கும்.
- **இரட்டையர்கள் சந்திப்பு:** மிக அரிதாகவே நாம் இரட்டையர்களை சந்திக்கும் வாய்ப்பை பெறுகிறோம். ஏனென்றால் 1000 பிரசவங்களில் 9 நபர்கள் மட்டுமே இரட்டையர்களைப் பெற்றெடுப்பதாக புள்ளி விவரம் கூறுகின்றது. எனவே, அதிகமான இரட்டையர்களை ஒரே மேடையில் கூடச் செய்து நாம் சாதனை படைப்போம்.
- **ஊரக பெண் பிள்ளைகளுக்கு ஆயிரம் சைக்கிள்கள்:** ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, தமிழ்நாடு, கர்நாடகா, மகாராஷ்டிரா மற்று ஒடிசா ஆகிய மாநிலங்களில் ஊரகப் பகுதியில் வசிக்கும் பெண் பிள்ளைகளுக்கு ஆயிரம் சைக்கிள்களை கொடை கொடுத்து புதிய சாதனை படைப்போம். இந்நிகழ்ச்சி 2025, ஜுன் 10 அன்று நடைபெறும். இந்நிகழ்வையும் ஒரு சாதனையாக்குவோம்.
- **ஒரு லட்சம் நோட்டுப் புத்தகங்கள் விநியோகம்:** இந்த கல்வி ஆண்டு துவங்கிய உடனே, ஜுன் 14 அன்று ஒரே நாளில் ஆறு மாநிலங்களிலும் ஒரே சமயத்தில் ஒரு லட்சம் நோட்டுப் புத்தகங்களை விநியோகம் செய்வோம். இதுவும் ஒரு சாதனையாக மலரும்.
- **மிக நீளமான தேசியக் கொடி:** இவ்வருடம் ஆக. 15 அன்று 5500 வாசவியன்களின் ஒத்துழைப்புடன் 2100 அடி நீளமுள்ள தேசியக் கொடியை VCI வெளியிடும். 2022ல் குஜராத் மாநிலம் செய்த சாதனையை முறியடிப்போம்.
- **ஒரு லட்சம் பலூன்கள்:** இவ்வருடம் அக். 01 அன்று வாசவி சங்கங்களின் ஸ்தாபித தினத்தைக் கொண்டாடும் வகையில் ஆறு மாநிலங்களிலும் லேகோ தாங்கிய ஒரு லட்சம் பல வண்ண பலூன்களை பறக்கவிடுவோம். இந்த நிகழ்வும் நிச்சயம் ஒரு சாதனையாக உருவாகும்.

மேற்குறிப்பிட்ட ஆறு திட்டங்களை ஊக்கத்துடன் நிறைவேற்றிய சங்கங்களுக்கு ICON நிகழ்வில் சிறப்பு விருதுகள் வழங்கப்படும்

சாதனைகளை எப்படி படைப்பது? மாவட்டங்கள், சங்கங்களுக்கு செயல் திட்டம்

பிப்ரவரி இதழில்...

வாசவி நியூஸ்

சர்வதேச வாசவி சங்கங்களின்® அலுவல் மாத இதழ்

சர்வதேச வாசவி சங்கங்கள்®
பதிவு எண் : 800/2008
ISO 9001-2015 பெற்ற தன்னார்வ சேவை அமைப்பு
ப்ளாட் எண் 21, குழந்தைகள் பூங்கா அருகில்,
ஸ்ரீபுரி காலனி, காகுடா,
கர்கானா, செகந்திராபாத்-500 015
Ph: 040-27669125 Cell: 098850 22121
Website : www.vasaviclubs.org
E-mail: vasaviclubs.org@gmail.com
www.facebook.com/vcivasavi

PERIODICAL

பணிகள் - 2025

சங்கங்கள்

சாதிப்பது

- 2 புதிய சங்கங்கள் விரிவாக்கம்
- 20 புதிய உறுப்பினர்கள் (எங்கிருந்தாலும்)
- 15 KCGF நன்கொடைகள்
- 10 VKSP புதிய உறுப்பினர்கள்
- இவ்வருடத்திற்கான திட்டம் - சமூகம் கீழ் ஏதேனும் ஐந்து சேவைத் திட்டங்கள்
- சர்வதேசத் தலைவரின் நல்லெண்ண விஜயம்
- A. படிவம் 1010 - 2024 டிசம்பர் 31க்குள்
- B. AAF ஜனவரி 10க்குள்
- C. படிவம் 1006 ஜனவரி 31க்குள்
- D. குட் ஸ்டேண்டிங் க்ளப் தகுதி மார்ச் 31க்குள்

பெறுவது

- காலை முதல் மாலை வரையில் 2 சிமெண்ட் பெஞ்சுகள்
- சரஸ்வதி பதக்கம் திட்டத்தின் கீழ் ரூ.5,000/- காசோலை (குட் ஸ்டேண்டிங் க்ளப் தகுதி கட்டாயம்)
- MIDCON-2025ல் ஸ்பெஷல் பின்கள் மற்றும் சான்றிதழ்கள் - சங்க PSTகளுக்கு
- ஆக.16: கிருஷ்ணாஷ்டமி தினத்தில் 'காரிகா ஸ்தம்பம்' அமைக்க ரூ.10,000/-
- DISCONல் மத்திய அமைச்சரின் பாராட்டுகளுடன் 'வாசவி சேவா ரத்னா' பட்டம்

பிராந்தியத் தலைவர் (R.C)

சாதிப்பது

- 5 புதிய சங்கங்கள் விரிவாக்கம்
- 100 KCGF நன்கொடைகள்
- 50 VKSP புதிய உறுப்பினர்கள்
- 100 புதிய உறுப்பினர்கள் (எங்கிருந்தாலும்)
- பிராந்தியத்தில் ரூ5 லட்சம் மதிப்பு சேவைகள்
- இவையனைத்தும் மார்ச் 31க்குள்

பெறுவது

- ஸ்ரீலங்காவிற்கு சுற்றுப் பயணம்
- RECONக்கு ரூ.50,000/- நிதியுதவி
- மத்திய அமைச்சர் வாயிலாக வாசவி சேவா சக்ரவர்த்தி பட்டம்

மண்டலத் தலைவர் (Z.C)

சாதிப்பது

- 2 புதிய சங்கங்கள் விரிவாக்கம்
- 50 புதிய உறுப்பினர்கள் (எங்கிருந்தாலும்)
- 20 VKSP புதிய உறுப்பினர்கள்
- 10 KCGF நன்கொடைகள்
- மார்ச் 31க்குள்: மண்டலத்தில் 70% சங்கங்களின் 1010, 1006, AAF பெறுவது

பெறுவது

- கோவா சுற்றுப் பயணம்
- ஜோன் சோஷியலுக்கு ரூ.10,000 நிதியுதவி
- தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்

Printed and Published by Gampa Nageshwer Rao, on behalf of vasavi clubs international Printed at new vision publications, 1-9-644/A/1,Vidya Nagar, Hyderabad - 500044, Telengana. Published at Vasavi Clubs International, D.No.1-1-385/32, P&T Colony, Gandhi Nagar, Dist - Hyderabad-500 080, Telengana State. Editor : Gampa Nageshwer Rao.